[illegible]
[illegible] 8 [illegible] 8
Aug 1935
JL
RB73 m211, M28
35·8·8·
187109

1171

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 8—No. 8.

OFFICE OF THE ... 21 AUG 1935 ... MADRAS

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௮ | யுவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1935 ஆகஸ்மீ | இதழ் ௮ |
|---|---|---|

உள்ளுறை | பக்கம்

சமாஜ விசேஷ மகாநாடு ... ... ௩௩௭
திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம் ... ௩௪௪
திருநீற்றின் சிறப்பு ... ... ௩௪௮
ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும் ... ௩௫௧
முதல்வனது அறக்கருணையும் மறக்கருணையும் ... ௩௫௪
சித்தாந்த சாத்திரம் ... ... உ௮௧ - ௩உ0

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.
ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

## திருஅஞ்சைக்களத்தில் சுந்தரர் திருநாள்

கோயன்புத்தூர் C. K. சுப்பிரமணிய முதலியார், C. M. இராமச்சந்திர செட்டியார் முதலிய சைவத்திருவாளர்களின் நன்முயற்சியால் இவ்வாண்டில் திருஅஞ்சைக்களத்தில் கொச்சி அரசாங்கத்தார் செலவில் நூறு ரூபா திட்டத்தில் சுந்தரர் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அடுத்த ஆண்டில் அவ்வரசாங்கத்தார் இத்திருநாளை இதனினும் சிறப்பாகக் கொண்டாட வாக்களித்துள்ளது நமக்கு பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறது.

---

## ஆர்க்காட்டில் சுந்தரர் திருநாள்

இது வழக்கம்போல் ஸ்ரீ கண்ணன் திருச்சபையாரால் இவ்வாண்டிலும் கொண்டாடப்பட்டது. மகேசுவர பூசை, படம் ஊர்வலம் வருதல் முதலியன சுவாதி நன்னாளில் நடைபெற்றன. தொடர்ந்து மூன்று நாட்களில் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில் திருவாளர்கள் உலக ஊழியனார், மாணிக்கவாசக முதலியார், இராஜாப் பிள்ளை, துரைசாமிப் பிள்ளை ஆகிய பேரறிஞர்கள் முறையே அன்புநெறி, பெரியார், ஒழுக்கத்தின் உயர்வு, இராமனது இளமைக் காலத்து அறநிகழ்ச்சி என்பனபற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

---

## சைவ இளைஞர்கள் விழித்துளரா?

சமாஜம் நடத்தப்போகிற சைவத் தேர்வுகள் பற்றிய அறிக்கை இவ்விதழின் அநுபந்தமாக வருகிறது. அவ்வறிக்கையில் 1934ஆம் என்று வருமிடங்களிலெல்லாம் 1935ஆம் என்பதைக் கொள்க. திருவதிகையில் நடந்த சைவ இளைஞர் மகாநாட்டில் சமாஜம் நடத்தும் சைவத் தேர்வுகளில் சைவ இளைஞர்கள் அனைவரும் கலந்துகொண்டு இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் என்ற பட்டங்களைப் பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் ஏட்டிலிருப்பதா, நடைமுறையில் வருவதா என்பதையும் சைவ இளைஞர்கள் ஊக்கம் பேச்சளவில் நிற்பதா செயலிலும் வருவதா என்பதையும் 20-8-1935-க்குள் ஷெடி. தேர்வுகட்கு வரும் விண்ணப்பத் தாள்களின் தொகை காட்டிவிடும். சைவ இளைஞர்காள்! உறங்கற்க! விழிமின்! எழுமின்!

Registered No. M. 2330

REGISTRAR OF BOOKS
21 AUG 1935

# சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு”

| மலர் அ | யுவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1935ஆம் ஆகஸ்டுமீ | இதழ் அ |
| --- | --- | --- |

## சமாஜ விசேஷ மகாநாடு

[பத்திராசிரியர்]

நமது சமாஜத்தின் முப்பதாம் ஆண்டு விசேஷ மகாநாடு ஒன்று திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் சென்னை எழும்பூர் இப்ராஹீம்சேட் காலனியில், ஆனரரி மாஜிஸ்ரேட்டும் நமது சமாஜ அன்பருமாகிய சைவத் திருவாளர் - டி. வி. ஆதிசேஷ முதலியாரவர்கள் புதுவதாக அமைத்துள்ள “நால்வர் அருள்” என்ற நிலையத்தில் நிகழும் யுவஆண்டு ஆடிமீ ௩௨ (19-7-35) வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் மாலை ஐந்து மணிக்கு மகாநாடு தேவார பாராயணத்துடன் தொடங்கிற்று. காரியதரிசியார் முன் மொழிய, திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை பின் மொழிய தலைவரவர்கள் தலைமை பூண்டார்கள். பிறகு திரு. டி. வி. ஆதிசேஷ முதலியாரவர்களும், பண்டிதரத்னம் குகஸ்ரீ

புழலை - திருநாவுக்கரசு முதலியாரவர்களும் இயற்றிய வரவேற்புக் கவிகள் வாசித்து வழங்கப்பட்டன. பிறகு தலைவர் பேருரை சுருக்கமாக நிகழ்ந்தது. பின்னர் திருவாளர்கள் - சிவசாமி தேசிகரும், பொன்னரங்க முதலியாரும் முறையே ஐந்தெழுத்து, பாதிவிருத்தம் என்பனபற்றிச் சிறந்த ஆராய்ச்சி முறையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இவைகட்குரிய கருத்துரையும் தலைவரால் மிக விரிவாகக் கூறப்பட்டு அன்றைய கூட்டம் இரவு ஒன்பது மணிக்கு முடிந்தது.

அடுத்தநாள் மாலை மூன்றரை மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் நிகழ்ந்த பின்னர் திருவாளர்கள் - டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ., ஆர். சண்முகசுந்தரஞ் செட்டியார், வித்வான் - தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல். ஆகிய மூன்று பேரறிஞர்கள் முறையே கந்தரனுபூதி, குங்குலியக் கலய நாயனார், ஆறெழுத்து என்னும் பொருள்கள்பற்றி நிரம்பிய ஆராய்ச்சியோடு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் இவைகளைப் பற்றிய தமது கருத்துரையையும் மிக விரிவாகத் தெரிவித்தார்கள். அன்றைய கூட்டம் இரவு ஒனபது மணிக்கு முடிந்தது.

அடுத்த நாள் மாலை மூன்றரை மணிக்கு மீண்டும் மகாநாடு கூடிற்று. கடவுள் வணக்கமும் தலைவர் முன்னுரையும் நிகழ்ந்த பின்னர் திருவாளர்கள் - பூ. சமரபுரி முதலியார், குஞ்சிதபாத திரிபுரசுந்தரி யம்மையார், அ. மு. பரமசிவானந்தம், ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. ஆகிய பேரறிஞர்கள் முறையே அப்பூதியடிகள், தாய்மார் கடமை, தமிழரும் மதமும், பேச்சும் செயலும் என்னும் பொருள்கள் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி முறையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். உதவிக் காரியதரிசி திரு.



கே. இராமலிங்க முதலியார், பி. ஏ. தலைவரவர்கட்கும், இம் மகாநாட்டைத் தமது செலவில் நடத்தி உபகரித்த திரு. ஆதிசேஷ முதலியாரவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும், தமிழ்மறையோதிய கோவூர் தேவஸ்தான தேவார பாடசாலை ஆசிரியர் திரு. மு. சுப்பிரமணிய முதலியாரவர்கட்கும், மகாநாட்டுக்கு வந்து சிறப்பித்த பெரியார்கட்கும் வந்தனை கூறினார். பிறகு தலைவரவர்கள் விரிவாகத் தமது முடிவுரையை நிகழ்த்திச் சமாஜத்துக்கும் ஆங்குக் குழுமியிருந்த அன்பர்களனைவர்க்கும் ஆசீர்வாதம் செய்தார்கள். கடவுள் வாழ்த்தோடு இரவு பத்து மணிக்கு மகாநாடு இனிது நிறைவெய்தியது.

---

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 30-ம் ஆண்டு விசேஷ மகாநாட்டில் தலைமை பூண்டுள்ள திருக்கோவலூர் ஆதீனம் - திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத் தலைவர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகட்குச் சூட்டிய பாமாலை.

நீராடி நீறிட்டு நீரூடி தாள்போற்றில்
சீராகப் பேரும் திருவுமிக—நோராய்த்
தருவார்நம் சைவசித்தாந் தத்தலைவ ரன்புந்
திருபையு முண்டுநமக் கிங்கு.

ஈராறு செவியுடைய எம்பிரா னண்ணனின் இணையடி பணிந்தேத்தியே இப்பெரிய சைவசித் தாந்தமா நாட்டினுக் கிசைந்ததோர் தலைவருக்குப், பேராதி சேஷனும் வரவேற்பு கூறுவேன் பேரன்பு வாய்ந்த சபையில் பிரியமாய்க் கொண்டாடிப் போற்றவும் வேண்டினேன் பிஞ்ஞகன் தாள்பற்றியே, சீராகக் கலைகற்றுப் போதிக்க அருள்பெற்ற சிவவீரசைவ குருவே திருவோங்கி தினதுபுகழ் மிகவோங்கி நாடெலாஞ் சிறந்துமென் மேலுமோங்கப், பேராலும் மின்சுவைப் பாவாலு

மமுதமொழி பேசிடுந் தன்மையாலும் பெட்பிலுயர் பாதிரிப் புலியூரின் காட்சியே பெருமையுள ஞானவடிவே. 1

உந்தனைக் காணவும் பந்தனை யொழிக்கவும் உன்னதப் பதவி பெறவும் உண்மையாய் விளம்புவேன் தண்மையுள ஐயனே உம்பர்கோன் அருளெனக்குச், சந்ததமு முண்டாகும் சந்தேக மேயிலைச் சண்முகத் தைய னடியைச் சரணெனக் கொண்டாடிச் சொன்மாரி பொழிகின்ற சமரபுரி கருணை வடிவே, இந்தமனை தன்னிலே வந்துநித முந்தனின் இங்கிதச் சொற்கள் தம்மை இன்பமாய்ப் புகட்டியே துன்பத்தை நீக்கியே இகபரச் சுகவாழ்க் கையைத், தந்தென்னை ரக்ஷிக்கும் சண்முகத் தெய்வமே தரணிபுகழ் ஞான குருவே தமியேனை ஈடேற்றக் கோவூ ரிருந்தவென் தற்பரா வருக வருக. 2

சென்னைதான் புண்ணியஞ் செய்ததோ என்றாலுஞ் செகமெலாஞ் செய்திருக்கும் தேனொத்த கனிவாயின் மொழிதன்னைக் கேட்கவும் திருவடி பணிந்தேத்தவும், முன்னைவினையின்பய னென்னுளம் பூரிக்க முன்னின் றுமைக்கொணர்ந்து மும்மலம் போக்கவும் சம்மதப் படியெலாம் மொழியுணர்ந் தமர்ந்து நிட்டை, உன்னையே துணைகொண்டு பண்ணவும் செய்தனை உலகெலாம் மெச்சுமப்பா உயர்வான செந்தமிழைப் போற்றியே யாவர்க்கும் உணர்விக்க வந்தகுருவே, என்னையும் புனிதனாய்ப் பண்ணவே இங்குற்ற இறைவனே சைவ குருவே எம்பிரான் கந்தனின் அருள்பெற்ற மூர்த்தியே எமதருமை முருக வருக. 3

சென்றபவ ஆண்டிலே சுவாமிகள் சொற்பொழிவு சென்னையைச் சூழ்ந்ததாலே செந்தமிழ்க் களஞ்சியம் வந்ததாமெங்கெனத் தேடிவந் தணுகுவாரும், அன்னைகுரல் கேட்டாவல் கொள்கின்ற மதலைபோல் அலைந்துவந் தடிபணிந்தே அளவிடக் கூடாத அன்பினைக் காட்டிடும் அடியார்கள் மிக



வாயினர், அன்றியுஞ் சைவத்தை யறியாத நாத்திகர் அறிவினைத் திருத்துதற்கும் ஐயனே நினதருமை மொழிமிக்க அவசியம் அன்பினை வளர்ப்பதற்குக், குன்றாத திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் கொற்றவா குறைதீர்க்கவே குஞ்சர முகத்தினுக் கிளையசண் முகனொடு குருமணி வருக வருக. 4

அன்றெனைக் குன்றைநகர் தன்னிலே கூப்பிட்டு அருமையுள சேக்கிழாரின் அன்பார்ந்த குருபூஜை உற்சவக் காட்சியை அனுபவிக் கச்செய்தனை, என்றுமுன் திருமொழியைக் கேட்கின்ற எந்தனை ஏகாந்த மோடுநுங்கம் எழிலுறும் பாக்கத்தில் உறைகின்ற எந்தையார் எமதருமை அகத்தீசரைச், சென்றன்று சேவிக்க அகிலாண்ட ஈஸ்வரியின் திருவருளைக் கூட்டிவைத்தாய் செப்பரிய நினதுபுகழ் எங்கணும் ஓங்கவே செம்மையொடு பலரும்கேட்க மன்றாடி மணந்தவிர்த் தாட்கொண்ட சரிதையுள மாபெரும்புராணமதையும் மங்களம தாகவே எந்தனுக் கருளிய மாசிலாக்குரு வருகவே. 5

செப்பரிய இப்பிறவி எப்பொழுதும் அப்பனடி செம்மையொடு பற்றிஉய்யச் செந்தமிழ்ச் சைவத்தின் சித்தாந்த மாநாடு செழித்து மென்மேலு மோங்க, முப்பதாம் ஆண்டினற் கொண்டாட்ட மதனையும் முகமலர்ந் தின்று குருவே முக்கண்ணன் அருளினால் யுவஆண்டு ஆடியில் முறையோடு புகர்நாளிலே, செப்பமொடு தேதியும் நான்கிலே தேவரீர் சேர்ந்தெங்க ளோடிருந்து தென்பழனி யாண்டவர்க் கன்பான வள்ளலே சிவசண்முகத் தையனே இப்பெரிய மாநாட்டினற்புதச் செய்கையை இயம்பிடும் தெள்ளமுதமே இங்கிதமதாகவே மங்களம துண்டாக எந்தையே வருக வருக. 6

வாழ்க வளமொடு சைவசித் தாந்தமும்
வாழ்க தளமொடு மாநாட்டின்தலைவரும்

வாழ்க வந்தென்றும் வழிபடும் அடியார்கள்
வாழ்க செந்தமிழ் வண்மைய தாகவே.

T. V. ஆதிசேஷ முதலியார்,
கௌரவ மாஜிஸ்டிரேட், எழும்பூர்.

---

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் முப்பதாம் ஆண்டு விசேஷ மகாநாடு அக்கிராசனாதிபதி திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நல்வரவேற்புக்கவி.

### ஆசிரிய விருத்தம்

தாயினுஞ் சாலப் பரிவொடு முருகன் றண்ணளி குழைத்
தினி தூட்டி, நாயினுங் கடையே னலம்பெற வேண்டி நய
மொழி யமுதினை நல்கும், ஞாயிறு தவழும் பாதிரிப் புலியூர்
ஞானியார் மடாலயத் தலைவா !, சேயினேற் ககல வுரைத்
திட லிங்குச் செழுஞ்சுடர் மதியமே வருக ! 1

சொற்சுவைக் கிரங்கி நாவினுக் கமைத் தூயநற் கரை
யினிற் சேர்த்த, அற்புத நிறைந்த பாதிரிப்புலியூர் அண்
ணலே மெய்த்தவத் துணையே, பொற்பமர் நினதுசிவப்
பொலிவதனைப் புனைந்துரைத் திடவரி தாமே, நற்பெரும்
புகழ்சேர் ஞானியார் மடத்து ஞான நாயகனே வருக ! 2

நற்றுணை யாகு முருகனை மறவா நறுமணங் கமழு
மெய்ஞ்ஞானம், முற்றுணர்ந் தேத்துமொப் பிலாதவனே
முழுமுதற் கடவுளென் றுரைத்தும், சொற்றவ ருமற் படி
மிசைப் பரப்பித் தூயநற் பத்தியை விளைக்க, உற்றிடு சிவ
சண்முக மெய்ஞ்ஞான வுயர்சிவா சாரிய ! வருக ! 3

கண்ணுதற் பரமன் குமரனே யுண்மைக் கலியுக வரத
னென் றேத்தும், எண்ணுதற் கரிய வழிமுறை காட்டியெங்



களை யாட்கொளு மகிபா !, தண்ணளி பரப்பு மெய்யடி யார்
கள் சரண்புகுந் தினிது வீற்றிருக்க, நண்ணிய வான்றோய்
பாதிரிப் புலியூர் ஞானியா சுற்றுரை வருக ! 4

திருவடிக் கமலஞ் சேவை செய்தன்பர் தெளிமனத்
துயரிய வாழ்விற், பெருமிதங் கொள்வா னருள்புரிந் தாட்
கொள் பெற்றியா லுற்றதோர் தெய்வக், குருபர னுரும்
பாதிரிப் புலியூர் குணமிகு தேசிகோத் தமனே, வருபிற
விக்கு வைதியனாகும் வள்ளலே ஞானியார் வருக ! 5

கற்பகக் கனியே கருணையங் கடலே கனதன மெய்ச்
சுடர் விளக்கே, தற்பரற் கினிய சண்முகத் தன்பே தகைமை
சால் சற்குணக் குன்றே, நற்புக ழார்ந்த பாதிரிப் புலியூர்
ஞானியார் மடாலயத் திருவே, சொற்பொழி வமுத மினிது
நற் கூட்டத் துங்கமாதவ ! இவண் வருக. 6

மேற்படி சமாஜப் போஷகரி லொருவராகிய பண்டித ரத்னம் குகஸ்ரீ புழலை - **திருநாவுக்கரசு முதலியாரவர்கள்** இயற்றியது.
(*Mirasdar & Honorary Magistrate, Sembiam.*)

---

## சைவ இளைஞர் பிரிவு

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் காரியங்கள் பலவற்றைப் பல ஆண்டுகளாகக் கவனித்து வரும், திரு. ச. நடேச முதலியாரவர்கள் புதல்வரும், நமது சமாஜத்து உதவிக் காரியதரிசியாக 1934ஆம் ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றவருமாகிய சைவ இளைஞர் திரு. ந. சண்முக முதலியார் ஓராண்டாகக் கை கால் பிடிப்பு நோயால் வருந்தி 31-7-35-ல் சிவபதமடைந்த செய்தியை மிக வருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

# திருவிளையாடற்
# கருணைத் திருவிருத்தம்

திருவால வாயர்சவுந் தரநாத ரங்கயற்கண்
[1]தேவி பாகர்
விரிவாகச் செய்தவெண்ணெண் விளையாட றனைச்சுருக்கி
விருத்தப் பாவாற்
பரிவாகச் [2]சொல்வதற்குப் பொற்பதும மலர்க்கரையிற்
பண்பால் வைகும்
மருவார்ந்த பிறைமவுலிச் சித்திவிநா யகன்மலர்த்தாள்
வழுத்தல் செய்வாம். 1

பொன்னுலகத் திமையவர்கோன் பழிநீக்கி வெள்ளானைச்
சாபம் போக்கி
மன்னுகடம் பாடவியை மாமதுரா புரமாக்கி
மகம்பு ரிந்த
தென்னவற்கு மகளாகி மூன்றுமுலை யுடன்றிக்கு
விசயஞ் [3]செய்த
கன்னிதனை மணம்பு ணர்ந்து [4]முடிதரித்து நடம்புரிந்த
கருணை வாழ்வே. 2

[குறிப்பு :—இத்திருவிருத்தங்கள் இதுகாறும் அச்சில் வெளி வந்தனவாகத் தெரியவில்லை. மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரவர்கள் 'சந்தனமுட்' என்ற திருவிருத்தத்தைச் சில பாடபேதங்களுடன் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தின் இறுதியிற் பதிப்பித்திருக்கின்றார்கள். இதனால் இச்செய்யுட்கள் போற்றத்தக்கன வென்பதில் ஐயமில்லை. சித்தாந்த நேயர்களும் தமிழறிஞர்களும் கற்று இன்புறுவார்களென்று எண்ணி இப்போது இவை முழுவதும் வெளியிடப்படுகின்றன. ஆசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை. முதற் செய்யுளும் இறுதிச் செய்யுளும் சில பிரதிகளில் மட்டும் உள்ளன.—**எஸ். வையாபுரிப் பிள்ளை.**]

(பிரதி பேதம்)—[1]செல்வி. [2]செய்ததற்குப். [3]செய்து. [4]முடிதரித்த...சொக்கே.



குறட்பூத [5]முண்ணவன்ன மளித்துவைகை நன்னீருங்
கொடுத்து வெற்றித்
திறத்தேழு கடலழைத்து மாமியையு [6]மதிலாட்டிச்
[7]செல்வ வுக்ர
விறற்பாண்டி யனைத்தந்து வளைசெண்டு வேலவனுக்
குதவி வேலை
[8]கறுத்தேவந் திடவேலை விடுத்துமுந்நீர் மாற்றுவித்த
கருணை வாழ்வே. 3

வாசவன்றன் முடிசிதற வளையெறிந்து மேருவினின்
[9]மகரந் தீட்டித்
தேசுறுபொன் [10]கொளநல்கி மறையுரைத்து ரத்நம்விலை
செய்து சால
வீசுதிரைப் பரவைதனை விழுங்குவித்து நான்மாடக்
கூடல் வேய்ந்து
காசினியோர் [11]புகழுவெல்லாம் வல்லசித்த ரானசொக்கே
கருணை வாழ்வே. 4

சிலைவேழ வேழமுணச் செய்துகரி [12]கிரியாக்கிக்
[13]கெவுரி சித்த
மலையாது மூன்றுவடி வமுங்காட்டி [14]மாறிநடம்
புரிந்து மாறாக்
கொலையான [15]பழிக்கஞ்சி [16]மும்மைகெட்ட பாதகன்றன்
கொடுமை மாற்றிக்
[17]கலைகாக்குங் குருநிந்தை செய்தானை யங்கம்வெட்டும்
கருணை வாழ்வே. 5

(பிரதிபேதம்)—[5]முண்ணவன்னக் குழியும்வைகை. [6]ங்கடலாட்டி. [7]தெய்வ. [8]கறுத்தேவந் திடமுந்நீர் மாற்றுவித்த; கறுத்துவேல் விடுத்து முந்நீர் மாற்றுவிக்குஞ் சொக்கே. [9]மகரங்கூட்டித். [10]கொணர நல்கி. [11]புகழ்வவெல்லாம். [12]கரியாக்கி. [13]செல்வமிக்க. [14]மாறிநின்றாடி மாறாக். [15]பழியஞ்சி. [16]முறைமை கெட்ட. [17]கலைகாட்டுங்.

நாகத்தை நாகமென [18]நன்கமைத்துப் பசுவைமலை
யாக நாட்டி
நீகர்த்த னெனநம்பு [19]சவுந்தரசா மந்தனுக்கு
[20]நிரைத்துச் சேனை
[21]மேகத்து மீனவனுக் குலவாத கிழிவழங்கி
விரும்பு மாதர்க்
காகப்போய் வீடுதொறும் [22]கனகவளை தொடுத்த சொக்கே
கருணை வாழ்வே. 6

மங்கையருக் கட்டசித்தி வழங்கிச்சோ ழன்றனக்கு
வடக்கு வாசற்
சங்கையறத் திறந்துதெரி சனங்காட்டி விடைக்குறியுந்
தரித்துச் சாத்தித்
துங்கமுடி [23]மேற்றண்ணீர் சுமந்தேபொன் னனையாள்தன்
[24]துயரந் தீரக்
கங்கைசடைக் [25]கரந்தசித்த வடிவான சுந்தரனே
கருணை வாழ்வே. 7

செம்பியனை மடுவில்விழச் செய்துதொலை யாக்கோட்டை
சுமந்து சேர்த்து [தும்
நம்புசெட்டிப் பெண்ணுக்கா [26]வழக்கில்வென்ற பொருளனைத்
[27]நாடி நல்கி
வெம்புவர குணன்றனக்குச் சிவலோகங் [28]காண்பித்து
விறகுந் தாங்கிக்
கம்பமுறு பத்திரற்குத் [29]திருமுகமு மீந்தசொக்கே
கருணை வாழ்வே. 8

(பிரதிபேதம்)—[18]வங்கமைத்து. [19]சவுந்தர பாண்டியனுக்கு. [20]நிறைத்துச். [21]வேகத்தின். [22]அங்கைவளை. [23]மேலாந்தண் ணீர் சுமந்து பொன்னனையாள் துயரந் தீர்த்து. [24]துயர நீங்கிக். [25]கணிந்த சித்த; கரந்த சித்தர். [26]வழக்குரைத்துப். [27]நாட்டில். [28]காட்டுவித்து. [29]தெரிசனமுங் கொடுத்த.



பாணற்குப் பொற்பலகை பாலித்து மனைவியிசைப்
பகைவெல் வித்துப்
பூணப்பன் றிக்குமுலை கொடுத்துமதி மந்திரியாப்
பொருந்த வைத்துச்
[30]சேணுற்ற கரிக்குருவிக் குபதேசஞ் செய்துவந்த
செங்கா ணுரை
காணத்தன் கதியளித்துப் [31]பணியால்நான் [32]கெல்லைகண்ட
கருணை வாழ்வே. 9

ஒருவாளி யாற்சோழன் வலிதொலைத்துத் தமிழ்ப்பலகை
யுயர்ந்தோர்க் கீந்து
தருகாஞ்ச னக்கிழியைத் தருமிக்குத் தருவித்துச்
[33]சார்ந்த கீரன்
வெருவாமற் கரையேற்றிக் [34]குறுமுனியாற் செந்தமிழை
[35]விளங்க வைத்துக்
கரைகாணுப் புலவரிகல் ஊமனால் மாற்றுவித்த
கருணை வாழ்வே. 10

வடவால வாயமர்ந்து வலைவீசி மாணிக்க
வாச கர்க்குத்
திடஞான குருவாகி நரிபரியாக் கிப்பரியை
[36]நரியாய்ச் செய்தே
அடலாறு வருவித்து மண்சுமந்து வழுதிசுர
மகற்றிப் புத்தர்க்
கடிதான கழுவேற்றி வன்னிகிணறிலைத்த சொக்கே
கருணை வாழ்வே. 11

(பிரதிபேதம்)—[30]சேணிற்றுன் புறுகுருவிக். [31]பணியா. [32]கெல்லை கொண்ட. [33]சார் நற்கீரர். [34]குறுமுனியாய்ச். [35]விளக்குவித்து. [36]நரியா யாக்கி.

*சந்தன முட்டிட முழங்கை [37]தானுரைத்துச் சாத்தியா
சளித்து நூலோர்
செந்தமிழைப் பாதிபகிர்ந் [38]துரைசெய்து புலிமுலையைச்
சிறிய புல்வாய்
[39]வந்தருந்த வருள்புரிந்த மாமதுரை யங்கயற்கண்
மணவா ளாசீர்க்
கந்தமலர்க் கடம்பவன மேவுசுந்த ரேச்சுரனே
கருணை வாழ்வே. 12

[40]இத்தகைமை லீலைதனை யடியவர்க்காச் செய்தருளு
மிறைவா யாங்கள்
முத்தநகை மீனவிலோ சனையாடன் பொற்பாத
முழுது நம்புங்
கொத்தடிமைப் பாரம்பரையா [41]மடிச்சேரி யாதலினாற்
கருணை கூர்ந்து
சித்தமிரங் கிக்காக்கக் கடனுகுந் தென்மதுரைத்
தேவ தேவே. 13

# திருநீற்றின் சிறப்பு

[S. A. அமிர்தகடேஸ்வரம் பிள்ளை, வேளாங்கண்ணி]

(மலர் ௭. இதழ் ௧௧. பக்கம் ௩௩௧-ன் தொடர்ச்சி)

**பு**கலிவேந்தராகிய நமது சம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் வாகீசப் பெருமானுடன் திருக்கதவம் திறக்கவும் அடைக்கவும் செய்த பின்னர், தாம் திருவாலவாய்க்கேகிச் சமண மதத்தைக் கண்டிக்கத் திருவுளங் கொண்ட

*இந்தச் செய்யுள் 'செம்பியனை' என்ற 8-வது செய்யுள் உள்ள ஏட்டுப் பிரதிகளிற் காணப்பெறவில்லை.

(பிரதிபேதம்)—[37]தனையுரைத்தார்க் கினியவா. [38]திகல்செய் கொடும். [39]வந்தருந்தும்படி யளித்த. [40]இத்தகைய. [41]யருள் சேருமாதலினாற்.



செய்தியைச் செப்பலும், அப்பர் பிரான் பாலறாவாயரை நோக்கிப் "பெருந்தகையீர் தேவரீர்க்குக் கோள்கள் தற்போது அத்துணை வலி இல ஆதலின் பிற்பாடு எழுந்தருள்க" எனலும் பெருமானார், கோள்களாலும் பிறவாற்றாலும் வரற்பாலவாய இன்னல்களைக் களைவதும் சைவ சமயத்தாரல்லாதாரை வாதில் வெல்லத் துணைக் கருவியாவதும் திருநீறே என்றோர்ந்தவராதலின்:

"கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கும்
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென் உளமே
புகுந்த அதனால்
புத்தரொடு மணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே."

எனப் பகர்ந்து வாக்கின் மன்னர்க்கும் திருநீற்றின் சிறப்பினை வலியுறுத்தினர்.

பின்னர் பண்பு மிகுந்த சம்பந்தப் பிள்ளையாரைக் குலச்சிறையார், பாண்டிமா தேவியார், தொண்டர் பலர் வரவேற்க திருமதுரைப் பதியை யடைந்தனர். ஆண்டு பாண்டிய மன்னர்க்குற்ற வெப்பு நோய் பல சமண மந்திராதிகளாலும் ஓட்டுதற் கியலாது அன்னார் தோற்று வெட்கிப்போமாறும், சைவம் திருநீற்றின் மயமே என்னும் சித்தாந்தம் பரவவும், திருநீறே பராசக்தியின் வண்ணமாயிருப்பது என நிரூபிக்கவும், மந்திரம் தந்திரம் யாவும் திருநீறே எனவும், வானவர்க்கும் விபூதியின்றேல் முத்தி சித்தியாதெனவும், வேதத்திற் கூறப்படும் திருநீறு ஒன்றே யாவரும் அணியத்தக்க சிவசின்னமாகலானும் இத்தகைய திருநீற்றினை விதிப்படி யணியின் தன்னால் வருவனவும், பிற

உயிர்களால் வருவனவும் தெய்வத்தால் வருவனவுமான துன்பந்துடைக்குமாறும், இம்மை மறுமைப் பயனை அளிக்குங் காரணவான் அதுவே எனவும், சிவபுண்ணியங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பவற்றிற்கும் விபூதியின்றேன் மாசுறும் என விளக்குவதும், சிவ! சிவ! வென்று நெற்றியினிடம் பூசு மாத்திரையால் பத்தியும் பதிந்து, நன்னெறி மிகுந்து நவமானதோர் இன்பம் பயப்பதோடு, வசீகரத் தோற்றத்தையும், யாவரும் மதிக்கத் தகுந்த சிறப்பையும் நன்மதியையும், தவத்திலழுந்தும் தூய எண்ணத்தையும் கொடுத்தலானும், அரவணையானோடு அன்னவாகனனும் அறிய அரிதான மிகு மாட்சிமைத் தன்மை வாய்ந்ததும் திருநீறே என உலகத்தார்க்கு விளக்கத் திருநீற்றுப் பதிகம் திருவாய் மலர்ந்தருளி, தென்னவன் மீது திருநீற்றினைத் தூவலும் நோய் நீங்கிச் சிவப்பேற்றுக்கு ஆளாயினன். இதனைப் பன்னிரண்டாம் திருமுறையின்கண் மெய்யன்பர் சேக்கிழார் சுவாமிகள் திருவிருத்தங்களாலு முணரலாகும். அவை வருமாறு:—

"தென்னவன் நோக்கங்கண்டு திருக்கழுமலத்தார் செல்வர்
அன்னவன் வலப்பால் வெப்பையால வாய்அண்ணல்நீறே
மன்னுமந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பதென்று
பன்னிய மறைகளேத்திப் பகர்திருப்பதிகம் பாடி."

"திருமுகங் கருணை காட்டத் திருக்கையால் நீறுகாட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றாற் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ வங்கணொழிந்து வெப்பகன்று நீங்க
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதுமுய்ந்தான்."

(தொடரும்)

# ஞானாமிர்த மூலமும் விளக்க வுரையும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்]

## பாயிரம்

### கடவுள்வாழ்த்து

அகவல்

வெண்டிரைக் கருங்கட லேழும், விண்டொட
வீங்கிய சென்னிச் சிமையமும், ஓங்கிய
ஏழிரும் பொழிலும், எண்ணீங்குயிரும்,
அளவில் அண்டமும்* உளைவின்றி விளைத்(து) அம்
மலரோன் தாதையை வருத்தும், தளரா
முன்னோர் இல்லா முன்னோன்

இஃது, ஆன்மாக்களையும், அவை நிலவும் அண்டங்களையும், அவற்றைப் படைக்கும் கடவுளரையும் படைத்தும் பரமன் தளர்வும், தன்னின் மூத்தோருடைமையும் இல்லாதவன் என்கின்றது.

உரைமுடிபு:—கடல் ஏழும், சிமையமும், பொழிலும், உயிரும், அண்டமும் உளைவின்றி விளைத்தும், தாதையை வருத்தும், தளரா முன்னோர் இல்லா முன்னோன் என்க.

உரை:—வெண்மையான அலைகளையுடைய பெரிய கடல்கள் ஏழனையும், வான் அளாவி எழுந்த சிகரத்தையுடைய மேருமலையினையும், உயர்ந்த ஏழாகிய உலகங்களையும், எண்ணிலடங்காத உயிர் வருக்கத்தையும், அளவில்லாத அண்டங்களையும், முயற்சியும் வருத்தமு மின்றி, படைப்புக் காலத்தே

* "அளவி லண்டமு முளையின்றி" என்பது அச்சுப்பிரதியிற் காணும் பாடம். சித்தாந்தம். மலர். 8. இதழ். 7. பக்கம். 324. வரி.8-ல் உளையின்றி என்பதனை உளைவின்றி எனத் திருத்திக் கொள்க.

மாயையில் தோற்றுவித்தும், அந்த மலரவனாகிய பிரமனையும், அவன் தந்தையாகிய திருமாலையும் படைத்து, அவர்கட்குரிய தொழில்களை முறையே வகுத்தும், தனக்கு ஓர் அசைவு சிறிதுமின்றி, தன்னின் மூத்தோர் ஒருவருமில்லாத முதியோன் என்றவாறு.

உளைவின்றி விளைத்து என்றவிடத்து எண்ணும்மை கூட்டப்பட்டது. காலமும், மாயையும் அவாய் நிலையால் வந்தன. வகுத்தும் என்ற உம்மையால், திதிகாலத்தில் திதிப்பித்தலும், சங்கார காலத்தில் அம்மாயையில் ஒடுக்குதலும் கொள்க. அம்மலரோன் என்புழிச் சுட்டு,பண்டறி சுட்டு. மலரோன் தாதையை வகுத்து என்பதற்கு யோக விபாகத்தால், மலரோனையும், அவன் தாதையையும் படைத்துத் தொழில் முறை வகுத்தமை கூறப்பட்டது. உளைவு, வருத்தம். கடல்கல் ஏழாவன: உப்பு, பால், தயிர், நெய்,கருப்பஞ்சாறு, தேன், நீர் என்பன. ஏழிரும் பொழிலும் என்றதனால் இனம்பற்றி, இருநூற்றிருபத்து நான்காகிய அநாசிருத புவன முதலாயுள்ள புவனமனைத்தும் கொள்க. தலைமைபற்றி மேருவைக் கூறினமையின், அதனைச் சூழ்ந்து நிற்கும் அஷ்டகுல பருவதங்களையும் கொள்க. அவை: மாலியவான், கந்தமாதனம், நிசதம், ஏமகூடம், இமம், நீலம், சுவேதம், சிருங்கம் என்பன.

வெள்ளிய நுரைகளைத் தலையிலே யுடைமையின், வெண்டிரை என்றும், அளக்கலாகா ஆழமும், புயலெழுந்தலைத்த காலத்தும் கலங்காது நிற்கும் தெளிவும் உடைமையின், கருங்கடல் என்றும், வானிற் செல்லும் ஞாயிறுந் திங்களும் பிறவும் தன்னை வலம்வர நிமிர்ந்து நிற்றலின், விண்தோட வீங்கிய சென்னிச் சிமையமும் என்றும் கூறினார். செழுமையும் பெருமையும் உடையவாகலின், உலகங்களை, பொழில் என்றார். "பொழிலேழும் காவல் பூண்ட புகழானாய்" (திருநா - தாண்)



என்றும், "செழும்பொழில்கள் பயந்துகாத்தழிக்கு மற்றை, மூவர் கோனாய் நின்ற முதல்வன்" (திருவா - திருச்சத - 30) என்றும் வரும் திருவாக்குக்களாலும் உணர்க. அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனச் சமயங்கள் நால்வகைப்படினும் ஒவ்வொன்றும் விரியுமிடத்து, தனித்தனி அவ்வாறாக விரியும் இயல்பு பற்றி அறுவகைச் சமயம் என்று வழங்குதல் போல, வகையால் மூன்றாயினும் எவ்வேழாக விரியும் இயல்பு பற்றி, பொழில் ஏழும் என்றார். உலகம் மூவகையாதல், "ஒருவன் இருதாள் நிழற் கீழ், மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" (ஐங் - 1) என்பதனால் உணரப்படும். விரியுமியல்புபற்றிச் சமயங்களை ஆறென்றல், "ஆயத்துள் நின்ற அறுசமயங்களும், காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா" (திருமந்-1530) என்றும், "முன்னம் இருமூன்று சமயங்களவையாகிப், பின்னை யருள்செய்த பிறையாளன்" (திருஞான - தே - புகலி - திருவிராகம் - 5) என்றும் வருவனவற்றால் அறிக. எண்ணுக்கு அடங்காமையின், எண்ணீங்கு உயிர் எனப்பட்டன. அண்டங்கள் அளவில என்பது, "அளவிறைத்தளவா அண்டமும்" (ஞானா - 64) எனப் பிறாண்டுக் கூறுமாற்றானும், "அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம், அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி, ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (திருவண்ட - 1 - 4) எனவரும் திருவாக்கானும் உணர்க.

கடலும், மலையும், பொழிலும்,உயிர்வகையும், அண்டமுமாகிய இக்கூறியவனைத்தும் ஒருவகைநெறியும்,முறையும்,அளவும்கொண்டு, அந்நியமங் கடவாது ஒழுகும் ஒழுக்கமுடைமை, இயற்கையில் விளங்கித் தோன்றுதலின், உலகியலில் நின்று நோக்குவார்க்கு இவற்றை ஆக்கியோன்பால் முயற்சியுண்மை புலனாயினும், "உண்மை அஃதன்று; அவன் சங்கற்பித்த

மாத்திரையே யாவுந் தோன்றும் பான்மைய'' என்பார் உளைவின்றி விளைத்து என்று கூறினார். இதனால் பரமனது முடிவிலாற்றலுடைமை விளக்கியவாறும். உலைவின்றி என்பது எதுகையின்பம் குறித்து உளைவின்றி என நின்றதெனக்கொண்டு, "உலகுயிர்களைக் கேடின்றாமாறு விளைத்து" என உரைத்தலும் ஒன்று. அலமரு குயிலினம் எனற்பாலது "அளமருகுயிலினம்" (சீவக - 49) என நின்றமை காண்க. இனி முளையின்றி விளைத்து என்று கொள்வார், இவை அனைத்தும் தோன்றுதற்குரிய காரணம் இல்லையாகவும், தோற்றுவித்து என்பது பொருளாம் என்றும், "விச்சதின்றியே விளைவுசெய்குவாய்" என்று பிரமாணமும் கூறுவர். வித்துக்கும் முளைக்கும் உள்ள இயைபே மாயைக்கும் உலகிற்கும் உள்ள இயைபு ஆகலின், மாயையினை முளையென்றல் முறைமையாக, அதன் கண் தோன்றும் உலகினை முளையின்றி விளைத்து என ஈண்டுக் கூறுவதும், "கலை முதல் மாயையின் இவண, நிலைமலிபுடைய நினையுங்காலே" (ஞான - 23) எனப் பிறாண்டுக் கூறுவதும் முரணாமாறு காண்க. "தூலமாய்த் தோன்றும் உலகினைச் சூக்குமமாய் ஒடுக்கி மாயையில் வைத்துப் பின் அதனினின்றும் மீளத்தோன்றுவித்தல் பரமன் செயல்" என்பது அறிவு நூல்களின் முடிபு. அச்சூக்கும நிலை முளையாகலின், முளையின்றி என்றல் அசற்காரியமாதலும் அறிக. இக்கருத்தும் தொனிக்க, அவர்காட்டிய மணிவாசகப் பிரமாணத்துள் திருவாதவூரடிகள், "விண்ணு மண்ணகமுழுதும் யாவையும், வைச்சு வாங்குவாய்" (திருச்சத-96) என்றருளியதும் உணர்க. இனிப் பழைய உரைகாரர் "அரூபமான மாயையிலே சிருட்டி காலத்திலே தோற்றுவித்தும்" என்றே உரை கூறினர்.

படைத்தல் காத்தல் என்ற தொழில்வரலாறு குறித்துத் திருமாலை மலரோன் தாதை என்றார். உலகங்களையும் மலரோன் தாதையையும் விதந்து கூறி, மலரோனை உய்த்துணர வைத்தமையால், இவ்வுலகங்களையும், நாரணர் முதலிய உயிர்வருக்கத்துக் கடவுளரையும் "உளைவின்றி விளைக்கும்" பரமனே சங்கார காரணன் என்றும் பிரமன் முதலியோர் அவன் ஏவல் வழிநிற்கும் அவாந்தர காரணர் என்றும் அவனொருவனே முதற் காரணன் என்றும் உணர்க. இவ்வாறு உய்த்துணர வைத்தல் பண்டையாசிரியன்மார் இயல்பு. ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், தாம் பாடிய பொருநராற்றுப்படையில், பாடின, ஒருத்தியின் உருவநலங் கூறுவார். அவள்குணநலம் கூறும் இடம் வாயாமையாலும், அது கூறாவழி உருநலத்தாற் சிறப்பின்றாமாதலாலும், "மயிர்குறை கருவி மாண்கடை யன்ன, பூங்குழை யூசற் பொறைசால் காதின்" எனக் காதின் உருநலம் விளக்கி, "ஆடமைப் பணைத்தோள்" எனத் தோளையும் விளக்கியவர், இடைக்கிடந்த கழுத்தின் நலம் கூறுமிடத்து, அவள் பெண்மைக்குரிய நாண் முதலிய குணநலம் சிறக்கவுடையள் என்பதனை யுய்த்துணரவைக்கு முகத்தால் அக்கழுத்தின் விசேடமுணர்த்த ஒருவகை உவமமும் கூறாது. "நாணடச் சாய்ந்த நலங்கிளர் எருத்தின்" (பொருந - 31) என்று கூறுமாற்றால் அவ்வியல்புண்மை யறிக.



இவ்வாறு உலகங்களையும் உயிர்களையும் படைத்தல் காத்தல் முதலிய தொழில் பல புரியினும், தன் நிலைமை திரியாது நிற்றலின், "தளரா" என்றும், அங்ஙனம், தன்பால் எல்லாம் ஒடுங்குதலும், மீளத் தோன்றுதலும் தன் சங்கற்பத்தால் செய்து நிற்க, தான் ஒப்பாரு மிக்காருமின்றித் தானே தனக்கு எல்லையாய் நிற்கின்றான் என்பார், "முன்னோரில்லா முன்னோன்" என்றும் கூறினார். "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" என்பது திருவாசகம்.

இனி, "உளைவின்றி விளைத்து" (4) என்றதனோ டமையாது, "தளரா" (5) என மறுவலும் கூறியது. தன்பால் ஒடுங்கிய உலகுடன் மாயையானது சத்தியில் ஒடுங்கிப், பின் பரமன்பால் ஒடுங்க, புனருற்பவத்தில் அவற்றை அம்முறையே தோற்றுவித்தும், அவன் நிர்விகாரி என்பது, வலியுறுத்தற்கென வுணர்க. "அரணமில் கூற்றின், முரண்டொலை யொருவனும் முரியாச் சத்தியின், அண்டாண்ட மற்றெண்டரல் இடைவ, செய்தக் கண்ணும் செயலிலன்" (ஞான - 63) என்பதனாலும், "தோற்றுவித் தளித்துப் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும், போற்றவே யுடையன் ஈசன், புகுந்தது விகாரமென்னில், சாற்றிய கதிரோன் நிற்கத் தாமரை அலரும், காந்தம் காற்றிடும் கனலை, நீரும் காந்திடும் காசினிக்கே" (சி - சித்தி - 1 : 33) என்பதனாலும் இஃது உணரப்படும்.

இக்கூறியவாற்றால், பரமன், உலகு, உயிர் முதலியவற்றைப் படைத்தும், அப்படைத்தல், காத்தல் முதலிய தொழிற்குரிய கடவுளை நியமித்தும், நிர்விகாரித்வம், முடிவிலாற்றலுடைமை, முன்னோரில்லா முன்மை ஆகிய இவற்றையுடையன் என்பது விளக்கியவாறும்.

*     *     *     பின்னும்,
இளமையும் அஃதா இயைந்தோன், வளமலி
தோற்றம் ஈறென் றில்லோன்.

இது, பரமன் புதியரிற் புதுமையும் பிறப்பின்மையும் உடையன் என்கின்றது.

உரை :—பின்னும், இளமைத் தன்மையினும், அப்பெற்றியே அமைந்தவன் ; வளம்மிகுந்த பிறப்பும் இறப்பும் இல்லாதவன்.

சொற் சுருங்குதற்கு அஃது எனச் சுட்டி யொழிந்தார். அஃதாக வென்பது, அஃதா என விகாரப்பட்டது. ஒன்



றென்பது இடைச்சொல். அது தோற்றம் என்புழியும் இயையும். இனி, அது தோற்றக் கேடுகளுள் ஒன்றும் இல்லாதவன் என இல்லதன் இன்மை சுட்டிநின்றதெனினுமாம். இப்பொருட்கு உம்மை வருவித்துரைக்க.

அப்பெற்றியாக அமைதலாவது, "முன்னோரில்லா முன்னோன்" ஆகியதுபோலத் தன்னினும் இளையர், இனியில்லை, என்னுமாறு, இளமைச் சிறப்பு அமைந்து நிற்றல். பின்னும், இளமையும் அஃதா இயைந்தோன் என்றது, "பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப்பெற்றியனே" என்ற திருவாசகத்தையும், தோற்றமீ றென்றில்லோன் என்றது, "பிறப்போ டிறப்பென்று மில்லாதான்காண்" (திருவா-தாண்ட) என்ற திருநெறித் தமிழையும் நினைவூட்டுகின்றன.

*     *     கூற்றுக்(கு)
இளியே முற்ற *ஒளிமாள் திருநகை,
அருளி னங்குழை பரப்பி, இருள்தீர்
கருணை மாநனை, உயிர்ஞிமி றருந்த,
மலர்ந்த மாதர் மரகத வல்லி,
அந்தி வானத் தணிநிறம் கவர்ந்து,
சிந்தை செல்லாச் செழுங்கிரி ஒருபால்,
வளங்கொளப் படர்ந்த வண்ணம் போல,
அறவோள் அமர்ந்த பாகன்.

இது பரமன் உமையமர்ந்து விளங்கும் ஒண்மைநிலையுணர்த்துகின்றது.

உரைமுடிபு:—அருளின் குழை பரப்பி, உயிர் ஞிமிறு, கருணை நனையருந்த, மலர்ந்த, மரகதவல்லி, நிறம் கவர்ந்து, செழுங்கிரி ஒருபால் படர்ந்த வண்ணம்போல, கூற்றுக்கு இளி எழுற்ற, திருநகை அறவோள் அமர்ந்த பாகன்; என்க.

---

*"ஒளிமாண் டிருநகை," "ஒளியார் திருநகை" என்னும் பாடங்கள், மூலம் மட்டிலுள்ள சில பிரதிகளில் காணப்படுகின்றன.

உரை :—அருள் என்னும் அழகிய தளிரைப் பரப்பி, மயக்கத்தைப் போக்கும் கருணையாகிய அழகிய அரும்பு, உயிர்களாகிய வண்டினம் படிந்துண்ணுமாறு மலர்ந்த அழகிய பச்சைக் கொடியொன்று, அந்திக்காலத்து வானின் அழகிய செந்நிறத்தைப் பெற்று, மனத்தாலும் அளவிடுதற்கரிய செழுமலையின் ஒரு பக்கத்திலே வளம்பெறப் படர்ந்த தன்மைபோல, தன்சொல்லுக்கு இளியென்னும் நரம்பிசை மயக்கம் எய்தவும், அழகிய முறுவலொளிக்கு ஏனையொளிகளெல்லாம் தோற்றோடவும் விளங்கும் தரும மாதாவாகிய உமாதேவி விரும்பி யிருந்த ஒரு பாகத்தை உடையவன் ;

கூற்று, சொல், இளி, குரல் முதலாகக் கூறப்படும் எழுவகை நரம்பினுள் ஒன்று; இதன் இசை, மகளிர் சொல்லுக்கு உவமையாகக் கூறப்படுவதுண்டு ; "இன்னிசை யிரங்கும் நல்யாழ் இளியினு மினிய சொல்லாய்" (சீவக:1537) எனவரும். ஏமுறுதல், மயங்குதல்; "ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றி" (முருகு:163) என்புழிப்போல. இன், அல்வழிக்கண் வந்தது. நான்கனுருபு நகைக்கும் கூட்டப்பட்டது. கூற்றுக்கு இளி ஏமுற்ற அறவோள், திருநகைக்கு ஒளி மாள் அறவோள் என இயையும் பரப்பி, மலர்ந்த வல்லி, நிறம் கவர்ந்து, படர்ந்த வண்ணம்போல அறவோள் அமர்ந்த பாகன் என முடிக்க. போல அமர்ந்த பாகன் என்க. சிந்தை என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மாதர், உரிச்சொல். மரகத வல்லி, பசுங்கொடி. அறவோள் அமர்ந்த பாகன் என்றவிடத்து மூன்றனுருபு விரித்து அமர்தல் வினையைப் பரமனுக்கேற்றி, உமாதேவியுடன் கூடின பாகன் என்பர் பழைய உரைகாரர். அதனால் உவமையும் பொருளும் ஒவ்வாமை அறிக. "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்பது விதி (தொல். பொ. 283.)



ஏனைக் காலத்தில் தோன்றும் வான ஒளி, பொருள்களின் இயற்கை நலம் காட்டுதலன்றி, தன்னிறத்தையும் உடன் தந்து விளக்குதல் இன்மையின், "அந்திவானத்து அணி நிறம்" என்றார். அணிநிறம், பிறபொருட்டு அணிபடுக்கும் நிறம் என்க. "பிறர்க்கணி படுக்குமாற்றால் அணியெனும் பெயரவெல்லாம், சிறக்குமின் னனையாள் மெய்யில் சேர்ந்தணி பெற்று முன்னர், உறுத்தவப் பெயரி னீங்கா வாயின" (தணிகை - புரா ; வள்ளி: 148.) என்பதனாலும் இக்கருத்துண்மை அறிக. அந்தி வானத்து அவிரொளி பெற்றுத் திகழ்வன, அது மறைந்த வழி, அதனாற் பெற்ற அணிநிறம் இழந்து மழுங்குதலின், அவ்வாறின்றி எஞ்ஞான்றும் தன்பாற் கொண்டு திகழும் சிறப்புத் தோன்ற, "அணி நிறம் கவர்ந்து" என்றார். எனவே அந்நிறத்தைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டமை பெற்றாம். அறம் வளர்த்த நாயகி என்பதும் அம்மைத் திருநாமங்களுள் ஒன்றாதல்பற்றி அறவோள் என்றும், அவளை இன்றியமையாளாகலின் பரமனைப் பாகன் என்றும் கூறினார். இனிமைப் பண்பில், இளி, தேவி, மொழிக்கு ஒத்தல் கூடாமையின், அதனை ஏமமாகக் கொள்வான் மயங்கிற்று என்றற்கு, "இளி ஏமுற்ற அறவோள்" என்றும், முறுவல் ஒளியின் முன் ஏனை ஒளிகள் தாமே மழுங்குதலின், நகைக்கு ஒளிமாள் அறவோள் என்றும் கூறினார்.

ஞிமிறு, வண்டின் சாதி; இது பூக்களில் நல்லனவற்றைத் தேர்ந்து தேனுண்ணும் இயல்பிற்று. (சிந்தாமணி குணமாலையார் இலம்பகம் காண்க.)

அருள் திருவுள்ளத்தும், கருணை அது பற்றிய செயலிடத்தும் நிற்றலின், அருளினங்குழை எனவும், கருணை மாநனை எனவும் பிரித்துக் கூறினர். முகை மொக்குளுள் தேனும் மணமும் நிறைந்திருத்தல் போல, கருணையின்கண்

சிவானந்தமும் சிவஞானமும் நிறைந்து நிற்றலால், கருணை மானனை எனச் சிறப்பித்தார். நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் உள்ளவாறுணர்ந்து, முறையே கொள்வதும் தவிர்வதும்செய்யும் உயிர்கள், சிவஞானத்தால் சிவானந்தமுண்மையறிந்து, அதனை நாடி முயலும் இயல்பு பற்றி, உயிர் ஞிமிறு என உவமஞ்செய்தார். அருளும் கருணையும் கொண்டு நிற்றல் ஆன்மாக்கள் பொருட்டே என்பதனை அறிவுறுத்தற்கு, "உயிர் ஞிமிறு அருந்த மலர்ந்த" என்றும், முற்றத் துறந்த முனிவரரும் தவயோகங்களால் வருந்திப்பெற விரும்பும் பரபோகம் அளித்தலின், "மாதர் மரகதவல்லி" என்றும், என்ஞான்றும் நலங்குன்றாமைபுணர்த்த "மரகதவல்லி" என்றும் கூறியருளினர். சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைக் கண் உள்ளதாகலின், சிந்தையும் ஏறாச் செழுங்கிரி என்னாது, "சிந்தையும் சேல்லாச் செழுங்கிரி" என்றார். "சிந்தை செல்லா" எனவே உயர்வும், "செழுங்கிரி" என்றதனால் அந்தமில் இன்பமுடைமையும் பெற்றாம். உயிர்கள் போகநுகர்ச்சி பெற்றுப் பல்குதற் பொருட்டுத் தேவியார் பரமனைக் கூடி நிற்கும் உண்மையை விளக்குதலின், "வளங்கோளப் படர்ந்த வண்ணம் போல" என்றார். அகிலாண்டகோடி யாவும் ஒடுங்குதலும், மீளத் தோன்றுதலும் செய்தவிடத்தும் ஒருதன்மையனாய் நிற்றலின், பரமன், செழுங்கிரி எனப்பட்டான். "அறவோள்" என்றதனால் அறமே தேவியார்க்கு உரு என்பது உணர்க.

"கூற்றுக்கு இளி ஏமுற்ற, திருநகைக்கு ஒளிமாள் அறவோள்" என்பதற்கு, "வசனத்துக்கு இளி என்னும் இசை ஆசைப்படவும், திருநகைக்கு மற்றைய ஒளிகெடவும் உண்டாகிய காருணியமே தனக்குச் சொரூபமாகவுடைய உமாதேவி" என்றும், "இருள்தீர் கருணைமானனை" என்பதற்கு, "குற்றமற்ற கருணையாகிய மகத்தாகிய அரும்பு" என்றும்,



"மாதர் மரகதவல்லி" என்பதற்கு, "காதலிக்கப்பட்ட ஒரு மரகதக்கொடி" என்றும் கூறுவர் பழைய உரைகாரர். இவர் உரையால் சொல்லுக்கு இளி ஏமுறவும், நகைக்கு ஒளி தோற்றோடவும் உண்டாயினாள் தேவி என்பது பட்டுப்பொருள் சிறவாமை அறிக. தேவிகருணையால் உயிர்களைப்பற்றி நிற்கும் குற்றம் நீங்குதலே யன்றி, அக்கருணைபால் குற்றம் தங்குதல் எக்காலத்தும் இன்மையின், குற்றமற்ற கருணை என்பதும் பொருந்தாதென்க. மாதர் என்னும் சொற்குக் காதல் என்பது பொருளாயினும் காதலிக்கப்பட்ட மரகதக் கொடி என்பது கட்டுரைச் சுவை படாமையறிக. ஆயினும், காதலிக்கப்பட்ட என்றமையின் தேவியார் உயிர்களால் தாயெனவும், பரமனால் தனக்கு இன்றியமையாத சத்தி எனவும் காதலிக்கப்படுதல் கொள்க.

அளவைகளாலும் பொருந்துமாற்றாலும் பொருளியல்பு ஆராய்தலே சிந்தையின் இயல்பாகலின், செல்லுதல் ஈண்டு அளத்தல் மேற்று.

இனி, "ஒளியார் திருநகை" என்ற பாடத்திற்கு ஒளி நிறைந்ததிருநகை யெனவும், "ஒளிமாண் திருநகை" என்ற பாடத்திற்கு ஒளியால் மாட்சிமையுற்ற திருநகை யெனவும் உரைக்க. திரு என்பதற்குப் பிறிதொன்றற்கு மில்லாத சிறப்பு என்று பொருள் கொள்க.

16 ..............................................அறவோர்க்(கு)
எல்லையாகிய தொல்லோன் தனாது
பாமாண் சேவடி பரவ
நாமாண் புளதாம் நலங்கொளச் சிறந்தே

இஃது, இதுகாறும் கூறப்பட்ட இயல்பினையுடைய பழையோனாகிய பரமன் சேவடியைப் பரவுதலால் இந்நூல் இடுக்கணின்றி இனிது முடியும் என்கின்றது.

உரை முடிபு:—தொல்லோன் தனாது, சேவடிபரவ, நா, சிறந்து, மாண்புளதாம் என்க.

உரை:—இருவகைப் பற்றுமற உலகத்தைத் துறந்த முனிவரர்கட்கும் உயர்வற உயர்ந்த தலைவனாகிய பழமை பொருந்திய பரமனுடைய பாடுவார் பாடும் பாட்டுக்களை மாண் புறச் செய்யும் சேவடியைப் பரவுவதால் யாம்கூறும் இந் நூலும் குற்றமற்றுச் சிறந்து புலவர் ஏற்கும் மாண்புடைய தாகும்.

துறவோர்க்கு என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தனதுஎனற்பாலது அது உருபின் அகரம் விகாரப் பட்டுத் தனாது என நின்றது. இதனை ஆசிரியர் குணவீரபண்டி தர், "அதுவென்பது ஆறும் உருபாம்', (நேமி ; சொல் - 19) என்ற சூத்திரத்து, "விதிமுறையால்" என்ற மிகையாற் கொள்வர். நன்னூலார் முதலியோர் ஆது என்பதனையே உரு பென்பர். இவற்றுள், நல்லது கொள்க. நா, ஆகுபெயர். "ஒரு நாவுக்குரைசெய்ய வொண்ணுமை உணராதேன் (பெரியபு. திருநா - 1) என்றாற்போல.

துறவோர், துறவாகிய அறத்தினையுடையோர். துறவு, துறத்தல். துறக்கப்படுவது உலகாகலினாலும் ஒட்டுப்பற்று ஒரு சிறிது உண்டாயினும் துறவுகெடுமாகலினாலும், "இரு வகைப்பற்றுமற உலகத்தைத்துறந்தோர்" என்பது உரைக் கப்பட்டது. பற்று இரண்டாவன : அகப்பற்று, புறப்பற்று என்பன. துறவுக்கு எல்லையாவது, துறத்தற்குரியது இனி ஒன்றும் இல்லையாம் நிலை. அந்நிலைக்கண் உள்ளது பரசிவ மாகலின் அவனைத் துறவோர்க்கு எல்லை யாகிய தோல்லோன் என்றும், எல்லை யாகிய என்றமையின், அங்ஙனம் ஆகிய காலம் அநாதியென்பார் தோல்லோன் என்றும் கூறினார். ஏனையோர் பாடும் பாட்டுடைப் பொருள் மெய்ம்மையுடைய வன்மையின் அப்பாட்டும் மாண்பிலவாம். பாட்டுடைப் பொரு



ளால் பாட்டுக்கள் மாண்பெய்தல் இயல்பு. அத்தகைய இயல் புடைய இப்பாட்டுக்கள் மெய்ம்மைப் பொருளாகிய பரமன் சேவடியைப் பாட்டுடைப்பொருளாக் கொண்டமையின் மாண் புறுதல் முக்காலத்தும் ஒத்ததே என்றற்குப் யாமாண் சேவடி எனத்தொழில்தொகு வாய்பாட்டாற் கூறினார். நலம் கொள்வழிக் குற்றமின்மையின், நலங்கோள என்பதற்குக் குற்றமற்று எனப்பொருள் உரைக்கப்பட்டது. படவே, சொற்குற்றமின்மையால், புலவர் ஏற்கும் சிறப்பும், சேவடி பரவுதலாகிய மெய்ப்பொருளுடைமையால் பொருட்குற்ற மின்மையும் விளங்கியது கொண்டு இந்நூல் முட்டின்றி முடியும் என்னும் துணிபினால் நாமாண் புளதாம் எனத் தெரித்தார். சேவடி, செம்மையுடைய அடி. செம்மையாவது தன்னையடைந்தாரதுமலம் அகற்றிச் சிவபோகம் நுகர்விக் கும் தன்மை. "செம்மையேயாய சிவபதம்" என்பது திரு வாசகம். "சிவனெனுமோசையல்ல தறையோ வுலகில் திரு நின்ற செம்மையுளதே" எனத் திருநாவுக்கரசர் கூறியருளி யதை, நம்பியாரூரர், "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்" என விளக்கியதனாலும் சிவ போகம் திருநின்ற செம்மை என ஆன்றோரால் கருதப்பட் டமை துணியப்படும்.

இனி, "துறவோர்க், கெல்லையாகிய தொல்லோன்" என்பதற்கு, "பற்றற்றோர்க்குத் தன் தன்மையைக் கொடுக் கும் முன்னோன்" என்பர் பழைய உரைகாரர்.

இதுகாறும் கூறியவாற்றால் "முன்னோர் இல்லாத முன் னோனும் (6) இளமையும் அஃதாக இயைந்தவனும் (7) தோற்றக் கேடுகள் இல்லாதவனும் (8) அறவோர் அமர்ந் தபாகனும் (16) தொல்லோனு (17) மாகிய பரமனது சேவடி பரவ, இந்நூலும் இருவகைக் குற்றமுமற்று மாண்பெய்தி விளங்குவதாம் என்பது கூறியவாறும்.

# முதல்வனது அறக்கருணையும் மறக்கருணையும்

[சிதம்பரம் தமிழ்ப் பண்டிதர் - அ. முத்தையா முதலியார்]

நான்முகர்கள் கோடிக்கணக்கான அண்டங்களைப் படைக்க, அவற்றை யெல்லாம் நாரணர், உருத்திரர்கள் முறையே காத்தல் அழித்தல் செய்துவருகிறார்கள். இம் மூவர்களும், மீட்டும் மீட்டும் இவ்வாறு செய்துவருதல் முதல்வனது கட்டளையாகும். நோக்கின் மூவரும் முதல்வனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முத்தொழிற் பதவியாளராவார்கள். இவர்களுள், உருத்திரர் நீங்க மற்றை நாரணர், பிரமர்கட்குப் பிறப்பு இறப்புக்கள் உண்டு. இவர்கள் முடியின் இவர்கள் பதவிகட்கு அவை வேண்டித் தவம் புரிந்து முதல்வன் கிருபைபெற்ற ஜீவர்கள் வருவார்கள். இந்திர பதவியும், நூறு அசுவமேத யாகஞ்செய்து முடித்த ஜீவர்கட்கு முறையே மாறிமாறிக் கிடைக்கும். மேலே அண்டமென்றது, பதினன்கு உலகைக் கொண்டது. பதினன்குலகாவன : மேலேழுலகும், கீழேழுலகமாம். மேலேழுலகின் பெயர்களாவன : பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகமாம். கீழேழுலகின் பெயர்களாவன : அதலம், விதலம், சுதலம். தராதலம், மகாதலம், ரசாதலம், பாதாளமாம். ஈண்டுக் கூறிய அண்டம், பிருதிவி அண்டமெனப் பெறும். ஓரண்டத்திலுள்ள பூவுலகின் பரப்பை நூற்கள் முகமாகப் பார்க்குமிடத்து, சம்பு, சாகம், குசை, கிரவுஞ்சம், கோமேதகம், இலவு, புட்கரம் என்னும் ஏழு தீவுகள், உப்புநீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, மது, நன்னீர்களையுடைய எழுகடலும் தம்மை முறையே வட்டமாய்ச் சூழத் தாமும் கடல்களுமாகச்



சேர்ந்து முறையே ஒன்றையொன்று வட்ட வரிசையாய்ச் சூழ்ந்திருக்க, இவற்றைச் சொர்ணபூமி சூழ்ந்திருக்க, இதனைச் சக்கிரவாள கிரி சூழ்ந்திருக்க, இதனைப் புறக்கடல் சூழ்ந்திருக்க, இதனை இருட்டறை சூழ்ந்திருக்க, இதனை அண்டச்சுவர் சூழ்ந்து எல்லையாக விருக்குமென விளங்கும். இவ்வாறே கந்தபுராணம் அண்டகோசபடலப் பாக்களும் கூறும். பார்க்க.

1. பல்வகைப் பிலங்கட் கெல்லாம் பரமதா யுற்றதொல்பார்
   உலகினுள் விரிவுமங்க ணுள்ளவு முரைப்பன் கேட்டி
   குலவிய சம்பு சாகங் குசைகிர வுஞ்சங் கோதில்
   இலவுகோ மேத கம்புட் கரமிவை யேழு தீவே.

2. பரவுமிவ் வுலகிலுப்புப் பாறயிர் நெய்யே கன்னல்
   இரதமா மதுநீ ராகு மெழுகட லேழு தீவும்
   வரன்முறை விரவிச் சூழு மற்றதற் கப்பால் சொன்னத்
   தரையது சூழ்ந்து நிற்குஞ் சக்கர வாளச் சையம்.

3. அன்னதற் கப்பால் வேலைக் கரசனும் புறத்தி லாழி
   பின்னது தனக்கு மப்பாற் பேரிருள் சேர்ந்த ஞாலம்
   மன்னவ காண்டி யப்பால் வலிகெழு மண்டத்தோடு
   துன்னுமிப் பொருள்கள் யாவுஞ் சூழ்ந்துகொண் டிருக்குமன்றே.

இங்ஙன மிருக்க. மேனுட்டார், பூகோள சாஸ்திரமென இயற்றி அதிலே சிறிது நிலமும், கடலுங் கூறிப் பூவுலகத்திற்கு அகலம், நீளம், குறுக்குக்கள் மைல் கணக்கில் கூறுவது, சந்தேகத்தைத் தரக்கூடியதாக விருக்கிறது. நாரதாதிகள்போலத் திரிலோக சஞ்சார வன்மை நமக்கிருக்குமாயின் பூகோளப் பரப்பு இதுவெனத் துணியலாம். அவ்வன்மை நமக்கின்மையின் மேனுட்டார் பூகோள சாத்திரமானது உண்மையுடையதென நாம் நம்புவதற்கில்லை. அவர்கள் கூறிய பூகோளப் பரப்புக் கணக்கு அவர்கள் கண்ணுற் கண்ட அளவில் கூறியதாய்த் தெரிகிறது. நிற்க அண்டங்களெல்லாம்

சராசர மயங்களானவை. சராசரங்களோ, நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு இலக்ஷம் யோனிபேதங்கள் உடையனவா யிருக்கும். எழுவகைப் பிறப்பிலே 84 இலட்சம் யோனிபேதங்கள் கூறியதுக்குக் காரணம் எனது சிற்றாராய்ச்சியில் புலப்படவில்லை. அதனைத் தெரிந்தார்கள் தெரிவிப்பது நலமாகும். நால்வகைத் தோற்றமாவன : அண்டசம், சராயுசம், சுவேதசம், உற்பிச்சமாம். எழுவகைப் பிறப்புக்களாவன : தேவர், மானிடர், பட்சி, மிருகம், நீர்வாழ்வன, ஊர்வன, தாவரங்களாம். தேவர்களுக்கு 11 லக்ஷம் யோனிபேதமும், மானிடர்களுக்கு 9 லக்ஷம் யோனி பேதமும், பறவைக்கு 10 லக்ஷம் யோனி பேதமும், மிருகங்களுக்கு 10 லக்ஷம் யோனிபேதமும், நீர் வாழ்வனவற்றிற்கு 10 லக்ஷம் யோனிபேதமும், ஊர்வனவற்றிற்கு 15 லக்ஷம் யோனிபேதமும், தாவரத்திற்கு 19 லக்ஷம் யோனிபேதமும் உண்டு.

ஜீவர்கள் மேற்சொன்ன அண்டங்கள் தோறும் நால்வகைத்தோற்றமாதிகளிலே தோன்றி நிலவி மறைகின்றனர். இவ்விதஜனன மரணாதிகளினாலே ஜீவர்கள் சதா சங்கடப்படுதல் ஜீவர்கள் முற்செய்த கன்மங்கள் காரணமா மென்பது பின்வரும் பிரபுலிங்க லீலை மனோலயகதிப் பாவான் தெளிக.

1. இருவினை தாம்வரும் யானெனலாலவ்
விருவினை யால்வரு மின்பொடு துன்பம்
இருவினை யானென லின்றெனி னில்லை
இருவினை யில்லெனி லில்லை பிறப்பே.

ஜீவர்களில், சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகை உண்டு. சகலர் என்பார் மும்மலமுடையார் மும்மலமாவன, ஆணவம், கன்மம், மாயை யென்பனவாம். பிர்மா, விஷ்ணுவாதி தேவர்கள் மும்மலமுடையவ ரென்றும், உருத்திரர் இருமலமுடையவரென்றும் சித்தாந்தசாத்திரம் கூறும்.



இன்னும் அஃது ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலராகிய அஷ்டவித்தியேசுரர், அணுசதாசிவர், சத்தகோடி மகாமந்திரர்களுக்குச் சுத்தமாயா தத்வம் தநு, கரண, புவன, போகமா யிருக்கும் என்றும், ஆணவம், கன்மமாகிய இருமலமுடைய பிரளயாகலராகிய நூற்றுப் பதினெட்டு உருத்திரர்கள், புவன கர்த்தர்களுக்கு அசுத்த மாயா தத்வம் தநு, கரண, புவன போகமாயிருக்கு மென்றும், மும்மலமுடைய சகலராகியபிர்மா விஷ்ணு, கிருமி ஈறாகஉள்ள ஜீவர்கட்குப் பிரகிருதி தத்வம் தநு, கரண, புவனபோகமாயிருக்குமென்றும் கூறுவது பார்க்கலாம். ஈண்டு நாம் எடுத்துக் கொண்டது பிரகிருதி தத்துவத்திலுள்ள சகலர் என்றறிக. ஜீவர்கட்கு, இயற்கையாகவும் செயற்கையாகவும் குணங்கள் வந்து பொருந்தும். இங்கே இயற்கைக் குணமாவது, முற்செய்த கன்மத்தால் தொடர்ந்த குணங்களாம். செயற்கைக் குணமாவது, இம்மையிலே கல்வி, கேள்வி, பழக்கங்களான் வந்தடையும் குணங்களாம். ஜீவர்கட்கு முற்செய்த கன்மம், இம்மையிற் கற்றகல்வி, கேட்ட கேள்வி, பழகிய பழக்கம் இவைகளானே குணங்கள் வந்தடையுமெனின் ஜீவர்கள் அறிவற்ற ஜடப் பொருளாகுமே என ஆசங்கைவரும். அதனை ஜீவர்கள் தங்கள் சிற்றறிவும் சிறுதொழிலு மட்டோடும் நில்லாமல் கன்மங்களாலே வந்தடையும் குணங்களையும் இம்மையில் கல்வி, கேள்வி, பழக்கங்களான் நேரும் குணங்களையும் மேற்கொண்டு நடக்கிறார்களெனக் கண்டு நிவிர்த்திக்க ஜீவத்தன்மை, படிகம் போலச் சேர்ந்ததன் வண்ணமாந் தன்மைத்து. அதனால், செயற்கையாகவும், இம்மையில் ஜீவர்கட்குக் குணங்கள் வந்து பொருந்து மென்பதில் என்ன தடையிருக்கிறது? மாயை காசிபரோடு கூடிப் பெற்ற சூரபத்மனாதியர் பிறந்தவுடன் தாய்தந்தையரை யடைந்து நாங்கள் செய்ய வேண்டியதைச் சொல்லியருளுங்களென்ன, அப்போது, காசிபர் மைந்தரைப் பார்த்துச் சிவனை நோக்கித் தவஞ்செய்து முத்தியை அடைவதுதான் உங்கட்குச் செய்யத்தக்க தென்றார். அதை மாயை மறுத்து மைந்தர்களே! உலகில், கல்வி, செல்வம், பலம் பெற்று மாற்றாரும் வணங்க அரசாள்வதே சிறந்தது. அதற்

கேற்ற மதத்தைச் செய்யுங்கள், அதற்குயானுதவி செய்கிறே னென்றாள். சூரபத்மனாதியர் தாய்சொன்னபடி நடப்பதே சரி யெனத்துணிந்து வீரமாமகஞ்செய்து முடித்துத்தாய்சொல்லை நிறைவேற்றினார்கள். இதனால், மேலே ஜீவர்களுக்குச் செயற் கைக் குணம்வந்து பொருந்துமென்றது ஒருதலையாவதுணர்க. ஜீவர்கட்கு இயற்கையாகவும், செயற்கையாகவும் வந்துபொருந் தும் குணங்கள்யாவும் நற்குணமாமோ வெனின் ஆகா. அவர் கள் முற்செய்த நற்கருமதீய கருமங்கட்குத் தக்கவாறு நற் குணமும், துர்க்குணமும் அடைவர். இம்மையிலும் அவர் கற்ற நூல்கள், கேட்டகேள்விகள் பழகிய பழக்கங்கட்குத் தக்க வாறு நல்லனவும் தீயனவுமாகிய செயற்கைக் குணங்களை யும் எய்துவர். இவற்றாலே, ஜீவர்களில் நற்கருமம் செய் வாரும், தீயகருமம் செய்வாரும், இருவிதகருமம் செய்வாரு மாயிருப்பர். ஒருபிறப்பிலே தீயவும், நல்லவும் செய்வதெப்படி யெனின், ஜீவர்கள் முற்பிறப்பிலே தீயவும், நல்லவும் கலந்து செய்திருப்பின் அவ்வாறே ஒருபிறப்பிலே செய்வரென்க. ஜீவர்கட்கு, நல்வினையும், தீவினையும் முறையே பொன்விலங் கும், இரும்புவிலங்குமாக இருக்கும்; புண்ணிய கருமங் களினாலே துறக்கத்தை யடைந்து போகத்தை நுகர்ந் தும், பாப கருமங்களினாலே நரகத்தை யடைந்து துன் பத்தை நுகர்ந்தும், சேஷ கருமங்களினாலே பூமியிற்பிறந்து இன்பதுன்பங்களை நுகர்ந்தும் மேல், கீழ், நடுவாகிய மூவிடங் களிலும் கொள்ளிவட்டம், காற்றாடி போல நிலைபெறுதலின் றிச் சஞ்சலப்படுவர். இவ்வாறாவது கன்மிகளுக்கு உரித் தானது சஞ்சிதகர்மம் காரணமாகப் பிறப்பெடுத்துச்சுழலும் ஜீவர்கள் பிறப்பை நீக்கிப் பேரின்பம் அடைய ஒரே ஒருவழி தான் உண்டு. அஃதாவது, எல்லாப்பிறப்பிலும் சிறந்ததாகிய மக்கட்பிறப்பைக் கருமபூமியில் எடுத்துச்சரியை, கிரியை, யோகம் முடித்து, ஞானமடைந்து பிறப்பறுத்துப் பேரின்ப மடைதலாம். மண்ணுலக மானிடப்பிறப்பைத் தவிர்த்து, வேறெந்தவுலகிலும் வேறெந்தப்பிறப்பினாலும் ஞானமடை தல் முடியாது. ஆங்கு ஞானமடைதற்குரிய சாதனங்களியற்ற முடியா. தேகமும் இடங்கொடாது. இதனைப் பின்வரும் பிர புலிங்கலீலை கைலாச கதிப்பாவான் தெளிக. (தொடரும்)



டும்; அஃதென்போல வென்னில், நீ உவமை கூறிய கடாதிகளை யும் மண்ணைக்கொண்டு உண்டாக்குவானைக் காண்டலால், நீரிடமாகக் குமிழி தோன்றுமாபோல, மனமுதலாயின தோன்றுமென்று கூறி னாய்; குமிழியும் வாயுவாலுண்டாம். ஆகையால், உருவிடத்திலு மன முதலானவற்றைக் கூட்டுதற்கொரு கர்த்தா வேண்டுமென்றறி வாயாக. ௫

நீரின் வந்தெழு கொப்புள் நீரது வாயெ ழும்நிகழ் பூதமும்
ஓரின் வேறுணர் வாயெ ழாஅவை பூத மாகி உதித்திடும்
தேரின் நூறடை காய்செ றிந்தவை சேர வேறு சிவப்பெழும்
பாரி னிற்பிரி யாது புந்தி பழிப்பு டம்பு கிடக்கவே. ௩௮

(உரை) நீரின் கண்ணே தோன்றுங் குமிழியும் நீராமாறுபோல, விளங்கிய பூதங்களும் விசாரிக்குமிடத்து வேறாகவறியும் அறிவா காது, அவை காயபூதமேயாம். அன்றியும்ஆராயும்வழி நூறுங்காயும் அடையுங் கூடி அவை கலந்தவிடத்து ஒரு சிவப்புண்டாமாறு போலப் பூதக்கூட்டத்தின் ஓரறிவெழுமெனக் கூறியது, பூமியிடத் துச் சிவப்புச்சேர்வை நீங்காது, அச்சேர்வைபோலப் புத்தியும் அவ் வுடலைவிட்டு நீங்காதாகவேண்டும். அங்ஙனமன்றி உடல்கிடக்கப் புத்தி நீங்குகையால் நீ கூறியது பழிப்பாம். ௬

கூறு சேர்வையின் வந்த போது சிவப்பெனும் குணம்
ஒன்றுமே, வேறு வேறு புலன்கு ணங்கள் உடற்கண் வந்து
விளைந்ததென், நூறு காயடை கூடும் வேறொரு வன்ற
னாலென நோக்கிநீ, தேறு பூத செயற்கும் வேண்டும் ஒருத்த
னென்று தெளிந்திடே. ௩௯

(உரை) நூறுங் காயும் அடையுமென்று கூறப்பட்டசேர்வை யின்கண் வந்த விடத்துச் சிவப்பெனும் ஒருதன்மையே காணப் படும். அப்படி ஒரு தன்மையேயாகாது புலனென்றும் பொறியென் றும் குணங்களென்றும் தனித்தனி உடற்கண் வந்துண்டாகிய தென்னை? அஃதன்றியும், நூறுங்காயும் அடையுஞ் சிவப்பேறக் கூட்டுதற்கு ஒருவன் வேண்டுமென்பதனை நீ கருதியதுபோலப் பூதச்செயற்கும் ஒருத்தன் வேண்டுமென்று நிச்சயமாகத் தெளிந் திடுவாயாக. ௭

ஆன ஐம்பொறி உண்டி நித்திரை அச்சம் மைதுனம்
ஆதியாய், ஊனில் வந்திடு முன்பி லாதவை யென்று ரைக்
கின் உலூதைபோல், வானின் வந்திடும் மாதர் ஆண்அலி
யாகி மானுடர் ஆதியாய், யோனி பன்மையும் இன்று பூதம்
உறும்பு ணர்ச்சியோர் தன்மையே. ௪௦

(உரை) சிலம்பியிடத்து நூல்தோன்றுமாபோல முன்பில்லாதவை யான ஐம்பொறி உணவு துயில் பயம் மைதுனம் முதலியவை காயத்தின் குணமாக இப்போதுண்டாமென்று நீ சொல்லில், மாதர் ஆண் அலியாகியும் மானுடராதியாகியும் ஆகாயத்தினின்றுந் தோன்றல் வேண்டும்; பூதக்கூட்டம் ஒருதன்மையாகலான் மிருகபசு பட்சி தாபராதிகளாகிய யோனிபேதமும் இல்லையாம்; ஆகையால், நீ கூறியது பொருளன்று. ௮

ஐந்து நான்கொரு மூன்றி ரண்டுடன் ஒன்ற தாயுட
லங்களின், வந்தி டாவுணர் விந்தி யங்களும் வன்ன பன்மை
யும் இன்மையாம், புந்தி யோடிய வன்ன போக குணங்கள்
பூத புணர்ச்சிதான், தந்தி டாதிவை பேத மாயிட வந்த
வாவினை தந்தவா. ௪௧

(உரை) நீ முன்பில்லையென்று கூறிய கன்மம் இல்லையாயின் யோநிபேதமும் இல்லையாய் அவ்வியோநிபேதங்களின் உண்டாம் உடலங்களின் இந்திரியங்களும் ஐந்து நான்கு மூன்று இரண்டு ஒன்றென்னும் அறிவுகளும் இல்லையாம். அவை யன்றியும்,—புந்தியால் அறியும் அக்ஷரங்களும் புசிப்புகளும் குணபேதங்களும் பூதக்கூட்டந் தரமாட்டா. இந்திரியம் மிகவாகவும் குறைவாகவும் சாதிபேதமாகவும் குணபேதமாகவும் பேதித்திடவந்தவாறு கன்மந்தந்தவாறென்று அறிவாயாக. (முன்னர் வன்னம் ஜாதி, பின்னர் வன்னம் அக்ஷரம்.) ௯

அறிவு பூதம தென்னில் வேறு புறத்த றிந்தமை கண்டிலம்
செறிவு தான்உடலத்தெ னில்சவ மான போதுடல் தேருமோ
குறிகொ ளாதுடல் வாயு வானது கூடி டாமையின் என்னின்நீ
பிறித ராதுயிர் நிற்க ஞானம் உறக்க மென்பிற வாததே. ௪௨

(உரை) பூதங்களே அறிவாமென்று நீ கூறில், புலப்படக்காணப்பட்ட மண்ணிலும் நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் அறிவு கண்டிலமன்றே, உடலிலே செறிந்தபோதுகாண் தோன்றுவதென்னிற், சவமாய்க்கிடந்தகாலத்தே அறிவுகண்டதில்லையே, அறிவு குறிக்கமாட்டாது காண். உடலின் வாயுப்பிரிந்தவாறே யென்று நீ கூறில், அந்த வாயுவானது உறக்கத்திலே பிரியாதுநிற்க அறியாமல் நிற்பானேன்? ஆகையாற் பூதக்கூட்டத்தே அறிவுதோன்றாது; வேறோரறிவுண்டென்றறிவாயாக. ௧௦



அறிவு டற்குண மென்னில் ஆனைய தாதி அந்தம் எறும்பதா
உறுமு டற்பெரி தான வற்றில் உதித்தி டும்பெரி தாகவே
சிறுவு டற்செறி ஞான மும்சிறி தாயி டும்பரி ணாமமும்
பெறுமு டற்சிறி தாவ தென்பெரி தாவ தென்சில பேசிடே.

(உரை) அறிவென்று வேறொருமுதலில்லை உடற்குணமேகாண் அறிவென்று நீ கூறின், ஆனைமுதல் எறும்பீறாக எடுத்தவுடலிற் பெரிதானவற்றின் உதிக்குமறிவு பெரிதாயுஞ் சிறிதானவற்றின் உதிக்குமறிவு சிறிதாயுமிருக்கவேண்டும். அங்ஙனமன்றி, பரிணாமத்தையுடைய யானையுடற்கு அறிவு சிறிதாயும் சிறியவுடலையுடைய மானுடற்கு அறிவுபெரிதாயுமிருப்பதென்? ஆகையால் அறிவு உடற்குணமன்று; வேறு நீ சொல்லத்தக்க துண்டாயிற்சொல்.

சரீரம் வளருந்தோறும் அறிவு வளரவும் அது கெடுந்தோறுங் கெடவுங் காண்டலானும் சரீரத்தைப்பிரிந்து சேதனநிற்கக்காணப் படாமையானும் சரீரகாரியமென்னிற் பிருதிவிசேடணமாகிய இந்தனம் பெருகுந்தோறும்பெருகிச் சுருங்குந்தோறுஞ்சுருங்கி அதனில் வேறுபடப்படாதாகி இந்தனமில்லாதவழி யில்லையாகின்ற அக்கிநி இந்தனகாரியமாகி இந்தனத்துடனொன்றாகாவாறுபோல, அறிவு சரீரகாரியமாகிச் சரீரத்துடனொன்றாகாது. அன்றியும் அறிவு மகாசரீரவானில் அற்பசரீரியாயினன் சகலசாத்திர ஞானமுடையனாகக்காண்டலிற் சரீரவிருத்தியாற் சேதனத்துக்கு விருத்தியில்லையெனக் கொள்க. ௧௧

போத மும்மெலி வாகி யும்மலி பூத மானவை கூடலிற்
பேத மோடு பெருத்து டற்கள் சிறுத்த பெற்றிமை என்றிடின்
ஓது டற்பெரி தான வுஞ்சிறி தாயி டாசிறி தானவும்
நீதி யிற்பெரி தாயி டாமுனம் உள்ள தன்மையின் நீடுமே. ௪௪

**(உரை)** அற்றன்று, உடற்குணமேகாண் அறிவென்றது, பூதமானவை கூடுங்காலத்துப் போதமெலிவாகியும் பூதமலிவாகியுங் கூடலில் அறிவு சிறுத்துக் காயம் பெருத்ததென்றும், போதமலிவாகியும் பூதமெலிவாகியுங் கூடலில் அறிவு பெருத்துக் காயஞ் சிறுத்ததென்றும் நீ கூறின், பூதக்கூட்டத்தாற் றோன்றுமென்று நீ கூறியவுடல் பெரிதானவுடல் சிறிதாயிடாது, சிறிதானவுடல் பெரிதாயிடாது, முன்னமுள்ள முறைமைப்பாட்டில் நிற்கவேண்டும். அங்ஙனம் நில்லாது பெரியவுடல் காலஞ்சென்றுற் சிறிதாயுஞ் சிறியவுடல் காலஞ்சென்றுற் பெரிதாயும் இருத்தலாற் பூதக்கூட்டத்தில் அறிவு தோன்றுவதன்று ; கன்மத்துக்கீடாக வடிவெடுத்துக் கோடலாமென்று கருதுவாயாக. (நீடுதல் - நிலைபெறுதல்.) கஉ

இயல்பு காண்இவை யென்னில் வேறிசை பெண்ணொ
டாணிரு தன்மையாஞ், செயல்கொ ளாஇவர் செய்தி காரண
மாக வந்து செனிப்பதென், இயல்ப தாமுடல் பூத காரிய
மாவ தும்மில்லை யாகுமால், மயல தாம்வினை யாலொ ருத்தன்
வகுத்த தன்மையின் வந்ததே. சரு

**(உரை)** கன்மம் உடலாக எடுத்துக் கோடற்கு அறிவில்லை ; இவையெல்லாம் பூதஇயல்பென்று நீ கூறின், இயல்பு ஒருதன்மைப் பட்டிருத்தலன்றி வேற்றுமைப்படப்பொருந்தி இரண்டு தன்மையாகிய பெண்ஆண் என்னும் முறைமையைக்கொள்ளாது. இஃதன்றியும், பூதகாரணமாகில் இரண்டு தன்மைப்பட பெண்ஆண் என்னும் முறைமை காரணமாகப் பிறப்பதென்னை? ஆகையால், இயல்பாமென்றவுடல் பூதஇயல்புமன்றுய்ப் பூதகாரியமாவது மில்லையாம். அதனால், நீ கூறியது மயக்கத்தை யுடைத்தாம். கன்மத்துக்கீடாக ஒருத்தன் உண்டாக்கப்பட்ட தன்மையிலேவரும் உருக்களென் றறிவாயாக. கங

காரணம்அவை யென்றதென்னை கடாதி போல்நிகழ்
காரியம், நேர ணைந்து சமைந்து நின்றிடும் என்ப தும்அது
நேர்கிலோம், போர ணைந்திடு மொன்றொ டொன்று
பொருந்து மாகில் வருந்தியும், நீர ணைந்தொரு தீயி னின்றது
கண்ட தாயின் நிகழ்த்திடே. சசு

**(உரை)** உருக்கட்குப் பெண் ஆண் செய்தி காரணமென்று நீர் கூறியதென்னை ? மண்ணின்கட் கடாதிகள் தோன்றுமாறு போலப்



பூதகாரணத்திற் பெண் ஆண் காரியப்பட்டுத் தம்மிற்கூடியகூட்டத்தே உருச்சமைந்திடுமென்று நீ சொல்லுகிற இதனையாங் கொள்ளோம். அஃதெங்ஙன மென்னில்,நீ கூறிய பூதங்கள்நான்குந் தம்மின் மாறுபடும் ஆதலால், அன்றி அவை மறுதலையாகாமற் கூடுமாயின் நீருந் தீயும் ஓரிடத்திற் கூடிநின்ற தன்மையை உன் காட்சியளவையிற் கண்டதுண்டாயின் வருந்தியுஞ் சொல்வாயாக. கச

பூத மேவு புணர்ச்சி யேபுரி காய காரண மாகுமேல்
காதல் ஆணொடு பெண்ணும் மேவு புணர்ச்சி காரண மாவதென்
ஆதி யேஉல கத்தில் ஆணொடு பெண்ணு மாயணை காரியம்
நாதன் நாயகி யோடு கூடி நயந்த காரணம் என்பரே. சஎ

**(உரை)** பூதக்கூட்டமே பொருந்தப்பட்ட காயத்துக்குக் காரணமாயின், பெண் ஆண்கள் காதலோடு புணரும் புணர்ச்சி காரணமாக உருக்கள் காரியப்படுவானேன் ? அங்ஙனமானது, அநாதியே கர்த்தா நாயகியோடுகூடிப் போகத்தை விரும்ப அதுகாரணமாக ஆதியே உலகின்கண் ஆண் பெண் காரியப்பட்டு அதுகாரணமாக உருக்கள் காரியப்பட்டு வருதலின்றிப் பூதக்கூட்டங் காரணமெனப்படாது. கரு

சுந்தம் வெம்மை கலந்தி டும்புனல் கன்மம் என்செய்த தென்றனை
சந்த னந்தழல் சார நீரிரு தன்மை யுற்றிடு மாறதோர்
தந்த கன்மம் இரண்ட ணைந்து தருஞ்சு கத்தொடு துக்கமும்
சிந்தி யாஎழு சீவ னுற்றிடும் வேறு டற்கிலை தேறிடே. சஅ

**(உரை)** புனலானது சந்தனாதிகளைக்கூடிக் குளிர்ந்தும் நெருப்பைக்கூடி வெப்பங்கலந்துமிருத்தலால் அஃதென்ன கன்மஞ்செய்தது ; ஆதலாற் கன்மமில்லையென்று கூறினாய், நீ உவமங்கூறிய நீர் சந்தனத்தையுந் தழலையுஞ்சார அவ்வொருபொருட்கு இரண்டுதன்மையுண்டானவாறு விசாரிப்பாயாக. கன்மம் இரண்டுவகைப்படப் பொருந்திச் சுகதுக்கங்களைக்கொடுக்கும். அந்தச்சுகதுக்கங்களை உற்றறிந்திடுவது சேதநமான உயிருக்கல்லது அசேதநமான உருக்கட்கில்லையென் றறிவாயாக. தந்த கன்மமாவது முன்ஜநநத்தில் அறிவுண்டாக்கிக் கொண்டதாய்ப் பின்ஜநநத்தில்வந்து கூடியகன்மம். சிந்தியாவெழுசீவனென்றது சுகதுக்கங்களுக்குப் பிரியாப்பிரியப்படுதலை. கசு

இன்பம் எய்தி இருந்து நீவினை இல்லை இங்கியல்
பென்றிடில், துன்பம் எய்திடு வானென் மற்றிது சொல்லி
டாய்சொல வல்லையேல், முன்பு செய்திடு கன்ம மென்றறி
கன்ம மும்முதல் வன்னறிந், தன்பி னூலுறு விக்கு மப்பயன்
ஆங்க மைப்பொ டநாதியே. ௪௯

(உரை) நீ ஸ்திரீகளுடன்கூடிப் போகஇன்பத்தை அநுபவித்திருந்தும் அது இயல்பொழியக் கன்மமில்லையென்று கூறில், அந்த ஸ்திரீகள்நீங்கினவிடத்துத் துக்கப்படுவானேன், இஃது எத்தால்வந்ததென்று சொல்லவல்லையாகிற் சொல்லுவாயாக, ஸ்திரீகளுடன் கூடிப் போகத்தை அநுபவிப்பதும் அவரைநீங்கித் துன்பத்தை அநுபவிப்பதும் நீ முன்செய்த புண்ணியபாவங்களென்று அறிவாயாக. அந்தப் புண்ணியபாவங்களுந் தாமாக அணைவதல்ல, கர்த்தாவானவன் அறிவுகள்செய்த கன்மத்துக்கீடாக அறிந்து அநுக்கிரகத்தாலேயூட்டுவன். அறிவுங்கன்மமும் அவற்றைக்கூட்டுதலும் அநாதியேயுள்ளன. ௧௭

அநாதி யேலமை வின்றெ னின்மல மாயை கன்மம் அணுச்சிவன்
அநாதி கன்மம் அணுக்கள் செய்ய அறிந்து கன்மம் உடற்செயா
அநாதி காரிய மாமு டற்கள் அசேத னம்மணு யாவறிந்(து)
அநாதி யாதி அமைக்க வேண்டும் அமைப்பி னேடும் அநாதியே.

(உரை) நீர் கூறியவை அநாதியேயாமாகில் ஒருவன் கூட்டுதலில்லையென்று கூறின், மலமும் மாயையுங் கன்மமும் ஆன்மாவுங் கர்த்தாவும் அநாதி, கன்மத்தை ஆன்மாக்கள்செய்ய அந்தக் கன்மந் தானுயறிந்து ஆன்மாக்களுக்கு உருவையெடுத்துக் கூட்டமாட்டாது, அநாதியே காரியப்பட்டு வரும்உடல்கள் அசேதனமாகையால் ஆன்மாவையறிந்து கூடமாட்டாது. ஆகையால் அநாதியாகிய கர்த்தா ஆன்மாவையும் கன்மத்தையும் அதற்குப்பொருந்தின வுருவையும் ஆதியாகக்கூட்டல்வேண்டும். அப்படி அவன் கூட்டினகூட்டரவும் அநாதியாகையால் இவையும் அநாதிதான். ௧௮

காணொ ணுகர ணங்க ளுக்குயிர் கண்டி டாமையின் இன்றெனில்
காணு மோகடங் கண்ட கண்ணினைக் கண்டு நிற்பதுங் கண்ணதே



காணொ ணாதுயிர் தானு மிப்படி கண்டி டுங்கர ணங்களைக்
காணொ ணுகர ணங்க ளுக்குயி ருண்மை யாவதுங் கண்டிடே.

(உரை) புறக்கரணங்களுக்கு உயிர்காணவொண்ணுதாகையாற் காட்சிக்குப்புலப்படாமையின் ஆன்மாவென்றொன்றில்லை யென்றுகூறின், சரீரமானது தன்னைக்கண்ட கண்ணைத்தான் காணவற்றோ ! அச்சரீரத்தைக் கண்டுநிற்பதுங் கண்ணுக்குள்ள தொழிலேயாம். காட்சியளவையாகிய கண்ணுக்குக் காணவொண்ணுதென்ற உயிரும் இத்தன்மைத்து, உயிர் சேதனமாகையாற் கரணங்களைக் கண்டுநிற்கும், கண்களைச் சரீரம் அறியாதவாறுபோலக் கரணங்களும் அவ்வான்மாவைக் காணவொண்ணு, ஆகையால் ஆன்மாவை யுண்மையாக உண்டெனவறிவாயாக. ௧௯

அங்கி யானது தானு மொன்றை அணைந்து நின்று நிகழ்ந்திடும்
பங்கி யாதுயிர் தானு மிப்படி பற்றி யல்லது நின்றிடா(து)
எங்கு மார்தயி லத்தை யுண்டெழு தீப மான தெரிந்திடும்
அங்க தாம்உடல் நின்று கன்மம் அருந்தி யாருயி ராவதே. ௫௨

(உரை) நெருப்பானது ஓரிந்தனத்தைப்பற்றிநின்று தன்வடிவைக்காட்டுந் தன்மையன்றித் தனித்துநின்று தன்வடிவைக்காட்டுந் தன்மையை யுடைத்தன்று; அதுபோல், ஆன்மாவும் ஒருருவைக்கூடியன்றி நிற்கமாட்டாது, தகளியெங்கும் நிறைந்த எண்ணெயைப்பருகி ஓங்கிய தீபமானது எரியாநிற்கும், அப்படிக் கன்மத்தால் எடுத்துக்கொண்ட காயத்தினின்றுங் கன்மத்தைப்புசிப்பது ஆன்மாவாம். திரி காயத்திற்கும், எண்ணெய் கன்மத்திற்கும், தீபம் ஆன்மாவிற்கும் உவமை. பங்கியாது - அழியாது. ௨௦

அறிவு தானுட லத்தின் வேறது வாயி றந்து பிறந்திடின்
அறிவு முன்புள திங்கு வந்தும் அறிந்தி டாமைய தின்றெனின்
அறிவை யோகன வத்து நீநன வத்தை அன்று தரத்திருந்
தறியு மவ்வறி வோம யக்கறி வாத லாலறி யாதுகாண். ௫௩

(உரை) அறிவானது இவ்வுடலத்தின் வேறுபட்டு இறந்தும் பிறந்துந் திரியுமாயின் அவ்வறிவு முன்புள்ளதாயின் இப்பிறப்பினும் அறியாமையின்றி அறிவேயாயிருக்கவேண்டும். அஃதில்லையேயென்று நீகூறின், நீ கனவுகாணுமிடத்தே அக்கனவை நனவென்ப

தன்றிக் கனவென்பதறிதியோ? அஃதன்றியும், நீ மாதாவுதரத்தில் முன்னிருந்தறிந்த அறிவோ பூததேகமானபின்பு மயங்கினஅறிவு. ஆகையால் இறந்தும் பிறந்துந்திரிகையால் ஆன்மாவுக் கறியாமையே குணமாம். உக

இறந்தி டும்அறி வேபி றந்திடு மென்ப திங்கிசை
யாதெனின், உறங்கி டும்பொழு தின்றி நின்றுணர் விங்கு
தித்திடு மாறதோர், பிறந்த இவ்வுடல் போக வேறுடல்
பின்பு வந்தமை பேசிடின், மறந்தி டுங்கன வத்தின் வேறு
டல் வந்த வாறு மதித்திடே. ருச

(உரை) இறந்த அறிவே பிறக்குமென்று இவ்விடத்துக் கூறியது பொருத்த முடைத்தன்றென்று நீகூறின், நீ துயில்செய்யுமிடத்து முகத்திற் பாம்பேறவும் அறிவின்றிக்கிடந்து விழித்தவிடத்து உணர் வினின்று பாம்பைக் காணவும் பயப்படுமாறு விசாரிப்பாயாக. இப் போதெடுத்துக்கொண்ட காயங் கெட்டாற் பின்பு மற்றொருகாயமுண் டாம்படி எப்படியென்று சொல்லின், நனவை மறந்திடுங் கனவில் உன்னையெடுத்துக்கொண்டு திரியும்உடல் உன்னைக் கூடியவாறு எத் தன்மை அத்தன்மையாக வென்றறிவாயாக. உஉ

கரணம் வாயு விடத்த டங்க அடங்கி வந்தெழு காரியம்
மரண மான விடத்து மற்றிவை மாய்ந்து பின்பு வருஞ்செயல்
கிரண மார்கலை கெட்டு திப்ப இறப்பி னோடு பிறப்பையும்
தரணி யோர்கள் மதிக்கு ரைப்ப ருயிர்க்கு மிப்படி சாற்றிடே.

(உரை) ஒருவன் மரணமானவிடத்தே இந்திரியங்கள்கெட்டுப் பின்பு அவைவரு முறைமைப்பாடு எத்தன்மைத்தென்னில்? ஒரு வன் மூர்ச்சித்தவிடத்துக் கரணங்கள் வாயுவிடத்தொடுங்க அவ்வாயு வுஞ் சேட்டைகெட்டுப் பின்பு அவன் மூர்ச்சை தீர்ந்தவிடத்து அக் கரணங்கள் சேட்டைப்பட்டாற்போலும். இஃதன்றியும், மதி யினது கிரணம்பொருந்தின கலைகள் கெட்டுந்தோன்றியும் வருதலை மதிக்கும் இறப்பும் பிறப்புமாகக் கூறுநிற்பர்கள் உலகத்தார்; அது போல, ஆன்மாவுக்கும் இப்படிக் கூறுவாயாக. உ௩

பூத மானவை காரி யங்கள் பொலிந்து மன்னி அழிந்திடும்
ஆத லால்ஒரு நாதன் இங்குளன் என்ற றிந்துகொள் ஐயனே



பேத மான கடாதி மண்ணினில் வந்த வாறு பிடித்திடில்
கோதி லாத குலால னல்வரு செய்கை யென்று குறிப்பரே.

(உரை) நீ கூறிய பூதங்கள் காரியப்பட்டுப் பொலிவினையுடைத் தாய்ப் புசிப்பளவு நிலைபெற்று மீளவும் அழியாநிற்கும்; ஆதலால், இவற்றை ஆக்கியும் அழித்துஞ் செய்வான் ஒரு கர்த்தாவுண்டென்று அறிவாயாக. மண்ணினிடத்துக் கடாதிபேதம் வந்தாற்போலப் பூதகாரியமே காயமென்னில், அம்மண்ணுங் குற்றமில்லாத குலால னது செய்கையாற் காரியப்பட்டாற்போலக் கர்த்தாவினுடைய செய் கையாற் பூதமுங் காரியப்பட்டதென்று அறிவாயாக. ஐயனே என்றது இகழ்வின்கண் வந்தது. அசேதனமாகிய மண் சேதனனாகிய குலாலனாலே காரியப்படுமாபோலப் பிரபஞ்சம் ஈசுரனாலே காரியப் படுமென்று அறிவாயாக. உச

வேதன் நாரணன் ஆர ணம்மறி யாவி ழுப்பொருள்
பேதைபால், தூத னாயிரு கால் நடந்திடு தோழன் வன்மை
செய் தொண்டனுக்(கு), ஆத லாலடி யார்க ளுக்கெளி யான
டிக்கம லங்கள்நீ, காத லாலனை ஈண்டன் வேண்டின
இம்மை யேதருங் கண்டிடே. ருஎ

(உரை) பிரமாவும் விஷ்ணுவும் இருக்கு யசு சாமம் அதர்வண மென்னு நாலுவேதமும் அறிதற்கரிதாகிய விழுமியபொருள், வலிந் தாட்கொண்ட சுந்தரமூர்த்திநாயனார்க்குத் தூதனாய்ப் பரவையா ரிடத்தே இரவின்கண் இருகால் நடந்த துணைவன், அப்படிப் பிரம விஷ்ணுக்களுக்கு அரியனாயினும் அடியார்களுக்கெளியனாய் எண்ணி யவை யிம்மையிலே கொடுக்கத்தக்கவனாகையால், அவனது ஸ்ரீபாத கமலங்களை நீ விருப்பத்தோடும் வழிபடுவாயாக. விரும்பிய போகத்தை யும் இம்மையிலே தருவனாதலால் அவனைமெய்யாகக் காண்பாயாக. வன்மைசெய் தொண்டனென்பதற்குக் கர்த்தாவை ஏவல்கொள்ளுந் தொண்டன் எனினும் அமையும். உரு

பொன்கு லாவு மணிக்க லன்கள் மலம்பு கில்லை
பொருந்திடா, மின்கு லாம்இடை யார்கள் தாமுல கத்தின்
வேட்கை விடும்பொருள், புன்பு லால்மல மூத்தி ராதி

பொசிந்து நாறு புலைக்கலம், என்கொ லாமிவர் மேல்வி ழுந்த
திவற்றின் என்பெற எண்ணியே. ௨௫

**(உரை)** பொன்னால் விளங்கப்படாநின்ற மணிகள் அழுத்திய அணிகள் மலத்திடை விழுந்தால் அம்மலத்தின் அசுத்தத்தாற் கையா லெடுத்தல் பொருந்தாது. அதுபோல, உலகத்து மின்போல நுடங்கின இடையையுடைய மகளிர்பால் மிக்க விருப்பமும் செயற்கை மண நீங்கினாலுண்டாகிய அசுத்தமிகுதிகண்டு ஆசையை விடத்தக்க பொருளாம். அஃதென்போலவென்னில், புல்லிதாய இரத்தமல மூத்திராதிகள் முதலானவை கசிந்து மிகவுந் துர்க்கந்தத்தை யுடைத்தாகிய பொல்லாக்காயமாகையால், இம்மலமூத்திராதிகளில் என்ன பெறுதற்கு விசாரித்து இவர்களிடத்து விருப்பமுண்டாவது இதனால் யாதுண்டாம். ௨௬

தோலி ரத்தம் இறைச்சி மேதை யெலும்பு மச்சை சுவேதநீ
ராலெ டுத்த முடைக்கு ரம்பை அழுக்கி னோடு புழுக்குழாம்
நூலொ ழுக்கிடு கோழை ஈரல் நுரைக்கு மூத்திர பாத்திரம்
சேல டர்த்தகண் ணார்க ளென்பது தேர்ம லத்திரள் திண்ணமே.

**(உரை)** துவக்கு உதிரம் மாம்சம் மேதை அத்தி மச்சை சுக்கில ஜலம் இவையிற்றினாலே எடுத்துக்கொண்ட துர்க்கந்தமாகியகாயம், அன்றியும் ஊத்தையுடன் கிருமித்திரள் நூலொழுகுங் கோழை ஈரல் இவைகளாற்பொங்கி நுரைக்கும் மூத்திரபாண்டமாதலால் அப்படிப்பட்ட காயத்தையுடைய மகளிர், சேலிரண்டு அடுத்தாற்போலுங் கண்ணையுடையாரென்று சொல்லுவது எதனாலென்று விசாரிப்பாயாக; விசாரிக்குமிடத்துச் சர்வமுநிச்சயமாக மலத்தொகுதியாம். ௨௭

ஆசை யுற்றுழல் சூக ரங்கள் அசுத்த மேவி அளைந்துதின்
றேசு கித்தன வாயி டுஞ்சுகம் ஏழை யோடுறும் இன்பம்நீ
மாச தற்றொளிர் நித்த சுத்த வளந்த ருஞ்சுக வாரிகாண்
ஈச னுக்கடி மைத்தி றத்தின் இசைந்து நாம்பெறும் இன்பமே.

**(உரை)** அறிவின் மகளிரோடு நீ சுகமுறுவது ஆசைமிகுத்துத் தடுமாறும் பன்றிகள் மலத்திற்புக்கு அதனைப்புசித்து அதனிற்புரண்டு மிகவுஞ் சுகத்தையடைந்தனவாய் நிற்பனபோலும். அங்ஙனமன்றியும், கர்த்தாவுக்கு அடிமைத்திறஞ்செய்து யாங்கள் பெறும் இன்ப



மாவது குற்றமற்று விளங்கும்படியாய் அழியாததாய் நின்மலமாயிருக்குஞ் சிறப்பினையுடைத்தாகிய இன்பசமுத்திரமாம். ௨௮

குரோத மேகுண மாயி ருந்தவர் சாந்தி நன்மை குறிக்கொளார்
அராக மேயணை வார்க ளாசை அறுத்த இன்பம் அறிந்திடார்
பராவு தேவர் பராவு தூய பராப ரன்அடி பற்றிநீ
விராவு மெய்யில் விடாத இன்பம் விளைந்தி டும்இது மெய்ம்மையே.

**(உரை)** கோபமிகுதியை இயல்பாகவுடையார் பொறையினாலுண்டாகிய நன்மையையறியமாட்டார், ஆசையேதமக்குக் குணமாகவுடையவர்கள் அவ்வாசையை அறுத்தவர்களுக்குண்டாகிய சுகத்தை அறியமாட்டார்கள்; அவர்களைப்போல நீயுஞ் சிற்றின்பமாகிய ஸ்திரீ போகத்தைக் கைக்கொண்டு பேரின்பமாகிய பிரமாநந்தத்தை அறியாய் அஃதறியவிரும்பின், இந்திராதிதேவர்களாற் பரவப்பட்ட பிரம விஷ்ணுக்களாற் போற்றிசெய்யப்படுஞ் சுத்தமான பரைக்கு மேலானவனது ஸ்ரீபாதங்களை நீ பற்றுக்கோடாகக் கொள்வாயாக; அதனால் அப்பொழுதே உன்னுடைய சரீரந்தன்னிலே ஒருகாலும் நீங்காத சுகம் பிரகாசிக்கும். இது சத்தியம். ௨௯

காம மாதி குணங்க ளைச்சுக மென்று கொண்டனை காதலால்
தூம மாரழல் அங்கி சீத மலிந்த போது சுகந்தரும்
நாம மார்தரு சீதம் வெம்மை நலிந்த போது தருஞ்சுகம்
சேம மாகிய இன்ப மாமிகு தெய்வ நன்னெறி சேரவே. ௩௦

**(உரை)** காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் இடும்பை அகங்காரம் என்கின்ற இவையிற்றைச் சுகமென்று கொண்டாய் அஃதெத்தன்மை யென்னில், குளிர்மிக்ககாலத்து வெப்ப விருப்பத்தால் புகைபொருந்தின அழல்கின்ற அக்கினி சுகத்தைத் தருவதுபோலவும், வெப்பமிகுத்த விடத்துப் புனலென்று பெயரையுடைய நீரின் குளிர்ச்சியை யடைந்தபோது சுகத்தைத் தருவது போலவுமாம். கர்த்தாவினுடைய ஞானமார்க்கத்திலே கூடினால் ஒருகாலும் விடாத இன்பமுண்டாம்; ஆதலால், அதனோடு கூடுவாயாக. காமமாதி யென்றதனால், காமச்சுகம், சாங்கம் உபாங்கமென இருவகைத்து. சாங்கமாவது—ஆலிங்கனம், முத்தம், மிடற்றினாலுண்டாம் ஒலிபேதம், நகக்குறி, பல்லிடுகுறி, அங்கதாடனம், அங்குலிமார்த்த

நம், சும்பநம் முதலியவுமாம். உபாங்கமாவது—அன்னம், வஸ்திரம், ணம், சந்தனம், தாம்பூல முதலியவுமாம். ௩௦

படிக்கு நூல்கள் சிவாக மம்பசு பாசமோடு பதித்திறம்,
எடுத்தி யம்புவ தீசன் வார்கழ லேத்தி டுந்தொழி லென்
றுமே, விடுத்தி டும்பொருள் காம மாதிகள் வேண்டி டும்
பொரு ளீண்டருள், முடித்து மும்மலம் விட்டு நின்மல
னோடு நின்றிடன் முத்தியே. ௬௩

(உரை) சிவநெறியாற் பேரின்பமெய்துவோர் படிக்கும் நூல்களாவன: வேதாகமங்கள், அவைகளெடுத்துச் சொல்லுஞ் சொல்லாவன: பதிபசுபாசத் திறங்கள், அவர்கள் கிரியையாவன: பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களை வணங்குகை, எப்போதும் அவர்கள் கைவிடும்பொருளாவன: காமக்குரோத முதலானவை ; அவர்கள் வேண்டும்பொருளாவது: மிக்கவருள். ஆகையால் இப்படி மூன்றுபதார்த்தத்தையு முற்றுப் பெறநிறுத்தி, மலத்திரயங்களையும்விட்டுக் கர்த்தாவோடு கூடுதல் முத்தியின்பம்; ஆதலால், நீயும் இச்செயலிலே நிற்பாயாக. இதனுள் நாலுபாதமும் அடங்கியவாறு கண்டுகொள்க. உலகாயதர் - மிச்சிரசார்வாகர், இரணியகர்ப்பசார்வாகர் என்றிருதிறத்தர். ௩௧

---

## சௌத்திராந்திகன் மதம்

நீதியார் வேத நூலின் நெறியலா அறங்கள் நாளும்
ஓதியோர் ஐந்து சீலம் உடையராய் உடல மூடிப்
போதிநீள் மரத்தின் மேவும் புத்தர்நால் வரினும் வைத்துச்
சாதிதான் இலாத கொள்கைச் சௌத்திராந் திகன்முன் சாற்றும்.

(உரை) நீதி சாத்திரத்தைத் தனக்கங்கமாகப்பொருந்திய வேத நூல்நெறியல்லாத அறநெறியாகிய பிடகநூலை நாடோறுமோதி, உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்னும் ஐந்து கந்தங்களின் குணங்களையுடையராய், உடலைத் துவராடையாற் போர்த்து, அரசினைத் தெய்வம்போற்பேணி அதன்கீழ்ப் பொருந்தியிருக்கும் பௌத்தர் நால்வகையார்களையும் வைத்து அவர்களில், வருணபேதமறக்காணுஞ் சௌத்திராந்திகன் முன்னே சொல்லாநின்றான்.



புத்தர்நால்வரினும் வைத்தென்பது - பௌத்தர்நால்வரினு உட்கோளாகக் கொண்டென்க. நால்வராவார்—சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்திமிகன், வைபாடிகன் என்போர். நீதியார் வேதமாவது—லௌகீகதன்மமாகிய சோதிடம், வியாகரணம், சிற்பம், பாதம், சிக்ஷை, சந்தசு என்க. நெறியலா அறங்களாவன—ஐராத்மவாதமும், அகத்திருவாதமும், ஆகாசம் காலம் திக்கு காரணத்பாவமுமில்லை யென்றும், குணியும் அவயவியுமில்லையென்றும் கொள்ளுங் கொள்கை. ஐந்துசீலமாவன—அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம் என்க. அவ்வைந்து சீலமும் சாரதற்கும், சாரணற்கும் தேசசீலம், உபசம்பன்னற்கு நூறுசீலம், சுவவீரருக்குக் கோடிசீலம், இப்படி நிலைதோறுஞ் சீலம்பலவாம். ௧

முழுதுணர்ந் துலகிற் கோறல் முதற்செயல் முனிந்து மற்றும்
பழுதிலா அருளி னாலே பாதுக்க துக்க னாகித்
தொழுதுவா னவரும் போற்றத் தொல்பிட கங்க ளான
வழுவிலா கமங்கள் சொன்ன மாதவன் நாத னாவான். ௬௫

(உரை) சர்வத்தையுமறிந்து பிரபஞ்சத்திற் பொய் கொலை களவு கள் காமங்களை வெறுத்து, குற்றமில்லாத கிருபையாலே எவ்வுயிர்த்துன்பமுந் தன்னுயிர்த்துன்பம்போற் கொண்டு, தேவர்களுந் தொழுது துதிக்கப்பட்டுவரும் பழைய பிடகநூலாகிய இகழ்ச்சியில்லாத ஆகமங்களை யருளிய புத்தமுனியே கர்த்தாவாவான்.

பழுதிலா அருளென்பது - இராச்சியத்தைக் கொடுத்தும், பிள்ளைகளைக்கொடுத்தும், தன் கண்ணைக்கொடுத்தும், உதிரமாம்சமுதலாயினபுறவுக்கரிந்து கொடுத்தும், வையங்காத்து வந்தவைமுதலியன. ௨

மருவிய அளவை காட்சி மானமென் றிரண்டி வற்றால்
கருதிய பொருள்கள் ஞான ஞேயமாய்க் கணத்திற் பங்கம்
வருமுரு அருவம் வீடு வழக்கென நான்க தாகித்
தருமமவை ஒன்றி ரண்டாய்த் தான்விரிந் தெட்டினுமே. ௬௬

(உரை) பிடக நூலிற் பொருந்திக்கொள்ளப்படும் அளவையாவன : காட்சியும் அநுமானமும் எனவிரண்டாம். இக்காட்சியாலும் அநுமானத்தாலும் அறியப்படும் பொருள்கள் அறிவும் அறியப்படும் பொருளுமாய் ஒருமாத்திரையிற் கெட்டுவரும், ஞானஞேயங்களினல்

உருவும் அருவும் வீடும் வழக்குமென நான்காகி அந்நான்கும் ஒன்றிரண்டாக விரிந்து எட்டாகத்தரும்.

கணத்திற்கெடுகை நால்வகை, அவையாவன - கெட்டுவர்த்தித்தலும், கெட்டு க்ஷயித்தலும், கெட்டொத்துநிற்றலும், கெட்டுக்கெட்டேபோதலுமாம். கணம் - தாமரையிதழை அடுக்கி ஊசியிட்டடித்தால் எட்டிதழுறு மெல்லை. ௩

உருஇயல் பூத மோடங் குபாதாய ரூப மாகும்
அருஇயல் சித்தம் கன்மம் என்றிரண் டாகும் வீட்டின்
மருவியல் குற்றம் கந்த மெனவழங் கிடும்வ ழக்கின்
இருஇயல் உள்ள தோடங் கில்லதாம் இயம்புங் காலே. ௬௭

(உரை) உருவினதியல்பு பூதவுருவத்துடனே உபாதாயரூபமென இரண்டாம், அருவியல்பு சித்த அருவென்றுங் கன்ம அருவென்றும் இரண்டாகும், வீட்டினது பொருந்தினவியல்பு குற்றவீடென்றும் கந்தவீடென்றும் இரண்டெனப்படும், வழக்கு இரண்டியல்புள்ளது அவை உள்வழக்கென்றும் இல்வழக்கென்றும் வழங்கப்படும் சொல்லுமிடத்து.

இயல் - இயல்பு உபாதாநம் - உபாதாயமென்றும்பேராம். உபாதாயம் - பற்றப்படுவது. உருவியல்பாவது - சைதன்னியரூபமென்றும் அசைதன்னியரூபமென்றும் இரண்டுவகைப்படும். சைதன்னியரூபம் பதினெட்டுக்கூடியது. அவை, பஞ்சேந்திரியங்களும் அவற்றின் விஷயங்களும் ஸ்திரீபும்ஸகமான பாவரூபமிரண்டும் இருதயமொன்றும் ஆகாரரூபமும் பூதநாலுமாம். அசைதன்னியரூபம் முன் சொன்ன எட்டாம். ௪

மண்புனல் அனல்கால் பூதம் வலிகந்தம் இரதம் வன்னம்
எண்டரும் உபாதா யம்தா னிவைஇரு நான்குங் கூடி
உண்டொரு பொருளு ரூபம் உறுபுலன் உபாங்க மோடக்
கண்டது சித்தம் கன்மம் நன்றுதீ தென்றல் காணே. ௬௮

(உரை) பூதவுருவாவது பிருதிவி அப்பு தேயு வாயு என நான்காம், உபாதாயரூபமாவது கடினம் கந்தம் இரதம் வன்னம் என நான்காக எண்ணத்தகும். எட்டுங்கூடியவிடத்தில் யாதொருபொருளுண்டாயது அஃதுருவாம். இவை புலன்கள் பொறிவழியோடியறிய அதனைக்கண்டது சித்த அருவாம், அப்படிக்கண்ட பொருளை நன்றென்றுந் தீதென்றுங் காண்டல் கன்ம அருவாம். ௫



குற்றவீ டராக மாதி குணங்களைக் குறைத்த லாகும்
மற்றவீ டுருவ மாதி ஐந்தையு மாய்த்த லாகும்
சொற்றருந் தொகைதொ டர்ச்சி மிகுத்துரை யென்று மூன்றாய்
உற்றிடும் வழக்கி ரண்டும் ஒன்றுமூன் றாகி ஆறும். ௬௯

(உரை) இராகாதி குணங்கள் பொன்றக்கெட்டு முத்தியின்பமடையாது சேட்டைகெட முத்தியின்பமடைவது குற்றவீடாம், உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மென்னும் ஐந்து கந்தங்களுஞ் சந்தானத்துப் பொன்றக்கெட்டடைவது கந்தவீடாம், உள்வழக்கு இல்வழக்கென்று கூறப்பட்ட வழக்கிரண்டும், தொகையுண்மைவழக்கும் தொகையின்மைவழக்கும், தொடர்ச்சியுண்மைவழக்கும் தொடர்ச்சியின்மை வழக்கும், மிகுத்துரையுண்மைவழக்கும் மிகுத்துரை யின்மைவழக்குமென ஆறாகி விரியும்.

அராகாதி குணங்களைக்குறைத்தல் குற்றவீடெனமாறுக. உருவமாதியைந்தையும் மாய்த்தல் மற்றவீடெனமாறுக. உருவமாதியைந்தாவது—உருவக்கந்தம், வேதனைக்கந்தம், சஞ்ஞானக்கந்தம், விஞ்ஞானக்கந்தம்,வாசனைக்கந்தம் எனப்படும். தொகை-கூட்டம். தொடர்ச்சி சந்தானத்தொடர்ச்சி. மிகுத்துரை - தோற்றநாசம். ௬

ஒருவனென் றோதப் பட்டான் உருவாதி ஐந்தும் கூடி
வருபவ னென்று ரைத்தல் தொகையுண்மை வழக்க தாகும்
உருவமங் காதி யாய ஐந்தையும் ஒருவன் இன்று
தருவதுதொகையினின்மைவழக்கதாஞ்சாற்றுங்காலே. ௭௦

(உரை) ஒரு கர்த்தாவென்றுரைக்கப்பட்டவன் உருவமுதலிய ஐந்தோடுங்கூடி வருபவனென்று கூறுதல் தொகையுண்மைவழக்காம்; உருவமுதலிய ஐந்தையும் ஒருகர்த்தா அவற்றோடுங் கூடாமல் நீங்கி நின்று உண்டாக்குவனென்பது தொகையின்மைவழக்காம்; சொல்லுங் காலத்து. ௭

காரண காரி யத்தின் தொடர்ச்சியாய்க் கால மூன்றின்
சோர்வறத் தோன்றும் கெட்டு வழியென்கை தொடர்ச்சியுண்மை

ஓர்தரின் ஒருவ னேஎக் காலத்தும் உள்ளா னென்று
தேர்வதுதொடர்ச்சியின்மைவழக்கதாம்செப்புங்காலே. ௭௧

(உரை) காரணகாரிய மென்னுந் தொடர்ச்சியுடையவாய்க் கால மூன்றென்னும் மயக்கமறக் கெட்டுத்தோன்றும் என்னும் வழித் தொடர்ச்சியுண்மைவழக்காம்; ஒரு கர்த்தாவே காரணகாரியத்தின் தொடர்ச்சியாய் எக்காலத்து முள்ளானென்று சொல்லுவது தொடர்ச்சியின்மை வழக்காம்; உணர்விறைற் சொல்லுமிடத்து. ௮

தோற்றிய பொருள்க ளெல்லாம் நாசமாம் என்று சொல்லும்
மாற்றமுன் னுரைத்தல் மற்றை மிகுத்துரை வழக்கி னுண்மை
போற்றிய பொருள்கண் கட்குப் போனது போல் முதிர்ந்து
வேற்றுமைப் பட்ட தென்கை மிகுத்துரை இல்வழக்கே. ௭௨

(உரை) தோன்றப்பட்ட பொருள்களெல்லாங் கெடுமென்னும் உத்தரத்தை முன்னர்ச் சொல்லுமது மிகுத்துரையுண்மைவழக்காகும், தோற்றியிரக்ஷைப்பட்ட பொருள்கள் காரியங்கெட்டுக் காரணமாய் நின்றதென்று கூறல் மிகுத்துரை யின்மைவழக்காம்.

கண்கட்குப் போனதுபோன் முதிர்ந்து வேற்றுமைப்படுகை - காரியமழிந்து காரணங்கிடக்கை. மிகுத்துரைமூன்றும் உள்வழக்கு இல்வழக்கு இரண்டினும் வழங்கும்வழியெனக்கொள்க. ௯

உள்வழக் கில்வ ழக்குள் ளதுசார்ந்த உள்வ ழக்கோ(டு)
உள்ளது சார்ந்த இன்மை வழக்குடன் இன்மை சார்ந்த
உள்வழக் கின்மை சார்ந்த இல்வழக் கென்றே ராறும்
உள்வழக்குள துண்டென்கைமுயற்கோடின்றில்வழக்கே. ௭௩

(உரை) முற்கூறிய உள்வழக்கும் இல்வழக்கும் உள்ளதுசார்ந்த உள்வழக்கும் உள்ளதுசார்ந்த இல்வழக்கும் இல்லதுசார்ந்த வுள்வழக்கும் இல்லது சார்ந்த இல்வழக்குமென்னும் நான்கோடுங்கூடி ஆறு வகையாம். அவற்றுள் உள்ளதையுண்டென்பது உள்வழக்காம்; அது யானைக்கோடுண்டென்கை. இல்லதனையில்லையென்கை இல்வழக்காம்; அது முயற்குக் கொம்பில்லை யென்கை. ௧௦

உணர்வுசார்ந் துணர்வு திக்கை யுள்ளது சார்ந்த வுண்மை
உணர்வுபி னின்று மென்கை யுள்ளது சார்ந்த இன்மை
உணர்வுமுன் பின்றித் தோன்றல் இல்லது சார்ந்த வுண்மை
உணரினில் லதுசா ரின்மை உள்ளங்கை உரோம நாணே. ௭௪

(உரை) அறிவைச்சார்ந் தறிவுண்டாமென்கை உள்ளதுசார்ந்த வுள்வழக்கு; அறிவுகெட்டாற் பின்பறிவுண்டாகாதென்பது உள்ளது சார்ந்த இன்மைவழக்கு; அறிவு முன்புள்ளதன்றாய்ப் பின்புண்டாமென்பது இல்லதுசார்ந்தவுள்வழக்கு; உள்ளங்கையின் மயிருண்டென்பதும் அம்மயிராற்செய்த கயிறுண்டென்பதும் இல்லதுசார்ந்த இல்வழக்கு ஆராயின்.

இவையன்றிச் சார்பு பன்னிரண்டுள. அவையாவன—பேதைமை, செய்கை, உணர்ச்சி, உருவருவவாயில், நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, முற்றோற்றம், பிணி, மூப்பு, சாக்காடு என இவை. ௧௧

சொன்னநால் வகையு மின்றிச் சொல்லிடும் பொருள்க ளெல்லாம்
என்னையோ அறிகி லோம்பித் தேறியோ வானம் ஆன்மா
மன்னுகா லங்கடிக்கு மனமுடன் வாக்கி றந்திட்(டு)
உன்னுமோர் இறையும் உண்டென் றுரைப்பது நித்த மன்றே.

(உரை) முற்சொன்ன உரு அரு வீடு வழக்கு என்னும் நான்கும் அவற்றின் விரிவுமன்றி வானமென்றும் ஆன்மாவென்றும் நிலைபெற்ற காலங்களென்றும் திக்குகளென்றும் மனவாக்கிறந்தறியும் ஒருகர்த்தாவுண்டென்றுஞ் சொல்லுவது நிலையுடைத்தன்றாகையால், இப்படிச் சொல்லும் பொருள்கள் பித்தேறியோ சொல்லாநின்றார்கள், எப்படிச் சொல்லுகின்றார்களென்றறிகிலேம். அவை நிலைப்பட்டனவல்ல.

ஈங்குவான் செயற்கு வாரா இயம்பிய பொருள்க ளெல்லாம்
தாங்குவான் உளதே யென்னில் தரித்திடா தருவ மாதல்
ஓங்குவான் ஓசைக் காதி யெனிலதங் குருவின் கூட்டம்
நீங்குவா னின்றி எங்கும் நின்றதேல் எங்கு மின்றே. ௭௬

(உரை) இவ்விடத்துக் கூறப்பட்ட வானென்னும் பொருள் தொழிற்குவாராது, பூதநான்கு முதலாகச்சொல்லப்பட்ட பொருள்களெல்லாவற்றையும் தாங்குதற்பொருட்டு ஆகாசமுளதென்று கூறின் அஃதருவமாதலால் பொருள்களைத் தரிக்கற்பாற்றன்று, பெரிய வானானது சத்தத்துக்கு முதலென்று கூறின் அவ்வோசையும் உருக்கூட்



187109

டத்தன்றித் தோன்றாது. அந்த ஆகாயம் நீங்குதலின்றி எங்குநின்றதென்று கூறின் அஃதெங்குமில்லையாம்; ஆகையால், ஆகாயமென்றொரு பொருளில்லை. ௧௩

போதமுண் டுயிர்கட் கென்னில் வாயிலைம் புலனும் நூலும்
ஆய்தலின் றொட்டுத் தீட்டுக் கலப்பினில் அறியு மென்னில்
ஏதமுண் டிரவிற் பச்சை சிவப்புடன் ஏய்ந்த போது
கேதநின் றென்னோ என்னும் ஐயமுன் கிடத்த லாலே. ௭௭

**(உரை)** உயிர்கட்கு அறிவுண்டென்று சொல்லின், இந்திரியங்களும் விடயங்களுஞ் சாத்திரங்களுங் கொண்டு அறிவானேன்; அப்படியன்று இந்திரியங்களைக் கலந்தும் புலன்களைப் பரிசித்துஞ் சாத்திரங்களைப் பொருந்திநின்றும் அறிவனென்பையாகில், இருளினிடத்துப் பச்சை சிவப்பென்னும் வன்னங்கிடக்க அவற்றைத் தொட்டுந் தீண்டியும் கலந்தும் அறியாமற் கிலேசமுற்று என்னோ என்னும் ஐயங்கிடத்தலாற் கூறியது குற்றமுண்டு. ௧௪

அறிந்திடா வாயி லின்றேல் அறிவின்றாம் ஐந்தும் பற்றி
அறிந்திடும் அறிவுண் டென்னில் ஐந்தினும் அறிவொன் றாக
அறிந்திட வேண்டும் சார்பின் அறிந்திடு மென்னில் உன்னை
அறிந்திலோம் புத்த னென்றிங் கழகிது சொன்ன வாறே.

**(உரை)** இந்திரியங்களில்லையாயின் உயிர் ஒன்றையும் அறியமாட்டாது, இந்திரியங்கட் கறிவில்லையாதலால் அவ்விந்திரியங்கள்ஐந்தையும் பற்றிநின்று அறிந்திடுமறிவு உயிர்க்குண்டென்று கூறில், உயிரறியுமாயிற் புலன்களைந்தாலும் அறியும் அறிவை ஒருபுலனாலறியவேண்டும். அற்றன்று, உயிரறியுமிடத்துப் பொறிகளின் வழிகளிலே நின்றும் அவ்வவற்றின் புலன்களாகிய குணங்களை அறியுமெனக் கூறின், உன்னை ஆன்மவாதி யென்றறிந்தோம்; நீ சார்பிற்றோன்றுமென்கையாற் புத்தனாய்; இஃதறிந்திலோம்; நீ உயிரறியுமென்று சொன்ன தழகிது. ௧௫

ஞானனே யங்க ளன்றி ஞாதிரு என்று சொல்ல
ஆனதிங் கறிவோ அன்றோ அன்றெனில் அவனி போலும்
தானதிங் கறிவே என்னில் சமைந்திடு நன்ப ருப்புப்
போனக மதற்குத் தானே கறியெனப் புகன்ற தாமே. ௭௯



**(உரை)** அறிவும் அறியப்படும்பொருளும் அன்றி அறியும்பொருளுண்டென்று இவ்விடத்திற் கூறில் அதற்குண்டாயதறிவோ அறியாததோ, அறிவில்லாததென்று சொல்லின் மண்போலும் அசேதநமாம். அறியும்பொருள்தான் அறிவென்று கூறின், பருப்பாற் கூட்டிச் சமைத்த சோற்றுக்கு அப்பருப்புச் சோறுதானே கறியென்று கூறிய தன்மைத்தாகும்.

இதனுட் பருப்புச்சோறென்று அதற்குப் பெயராயிருக்கக் கறியும் பருப்புச் சோறென்பது புனருத்தியாய தோடமாம். அதுபோல ஞானம்அறிவாயிருக்க ஞாதிருவும் அறிவாகலில் தனித்து வேண்டா என்பது கருத்து. ௧௬

உயிரினை அருவ தென்னில் உருவுடன் உற்று நில்லா(து)
உயிரினை உருவ தென்னில் உடலினில் உடல டங்கா(து)
உயிரினை அணுவ தென்னில் உடல்பல துவார மோடும்
உயிரினை நித்த மென்னில் உணர்வுத யாந்த மின்றே. ௮0

**(உரை)** நீ யுண்டென்று கூறியவான்மாவை அருவமென்று சொல்லின் உருவமாகிய வுடலோடு அருவமாகிய ஆன்மாப்பொருந்திநில்லாது; ஆதலால் அருவமன்று, அந்த ஆன்மாவுருவமென்று கூறின் ஒருருவிலொருரு அடங்காது; ஆதலால் ஆன்மா உருவமன்று, அந்த ஆன்மாவை அணுவென்று கூறின் உடலினில்லாது பலதுவாரத்தாற் போகவேண்டும்; ஆதலால், ஆன்மா அணுவன்று, அந்த ஆன்மாவை நித்தமென்று கூறில் அறிவு தோற்றமும் கேடும் இல்லையாக வேண்டும்; இவையிற்றையுடைத் தாகையால், ஆன்மா நித்தமன்று. ௧௭

எங்குமாய் நின்ற தான்மா என்றிடின் எங்கும் இன்றாம்
தங்கிடு நிறைவு தத்தம் சரீரங்கள் தோறு மென்னின்
மங்கிடும் உடலத் தோடே வடிவினில் ஓரிடத்தே
அங்கது நின்ற தென்னில் அடிமுடி அறிவின் றாமே. ௮௧

**(உரை)** ஓரான்மா எங்குநிறைந்து நின்றதென்று கூறின் உடல்தோறும் பல பேதப்படுமாகையால் ஓரான்மா எவ்விடத்தும் உண்டாகாது; அந்த ஆன்மா தத்தம் உடல்கள்தோறும் நிறைந்துநிற்குமென்று கூறின் உடல்கெடு மிடத்துத் தானுங் கூடக்கெட வேண்டும். அந்த ஆன்மா உறுப்பிலோரிடத்தைத் தனக்கிடமாகக்கொண்டு நின்றறிய

மென்று கூறின் தானின்றவிடமன்றிப் பாதாதிகேசமளவாக அறிய மாட்டாது; ஆதலால், அறியும்பொருளாகிய ஆன்மாவில்லை. ௧௮

சாற்றிய காலம் இங்குத் தங்கிய வாறி தென்னை, தோற்
றுவித் தளித்துப் போக்கும் தொழிலவை கால மென்னில்,
போற்றிய பொருளில் புக்குப் பிணங்கிடும் பொருட்பின் இன்
றாம், தேற்றிய இல்வ ழக்குத் திரவியத் தியல்பி னாமே. ௮௨

(உரை) முற்கூறியகாலம் இங்கு நின்றபடியெப்படி, பதார்த்தங்களைத் தோற்றுவித்தும் நிறுத்தியும் போக்கியும் நிற்பது காலமென்னில், அந்த மூன்றுவிதப் பொருளுடன் காலங்கூடி மயங்கிடும், அப்பொருட்குக் கேடுவந்தாற் காலமுமின்றாம், பொருள் மூன்றுவிதப்பட்டதன்றிக் காலம் மூன்றுண்டென்று கூறப்பட்டது தெளிவையுடைய இல்வழக்காம். ௧௯

எனக்குநீ கிழக்கி ருந்தா யாகின்மேற் கென்றா யென்பால்
எனக்குமேற் கிருந்தான் என்பாற் கிழக்கென இயம்புந் திக்குத்
தனக்குநாம் கொள்வ தெப்பால் சாற்றிடாய் இல்வ ழக்குத்
தனக்குள தாகும் உண்மை தானில தாகு மன்றே. ௮௩

(உரை) நீ எனக்குக் கிழக்கிருந்தாயாகில் என்னை மேற்கிருந்தானென்று சொல்லுவை, என்மாட்டு எனக்கு மேற்கிருந்தானொருவன் என்னிடத்து யானிருந்தவிடத்தைக் கிழக்கென்று கூறுவன், ஆதலால் திக்கிற்கு நாங்கொள்வதெப்பகுதி? நீ கூறிய கிழக்கையோ அவன் கூறிய மேற்கையோ சொல்லாய், நீ கூறிய இல்வழக்கிற்கு உளதாம் உள்வழக்கு இல்லையாம். ௨

உலகினைப் படைத்தான் என்றாய் ஒருவனிங் குள்ள
தாயின், உலகினைப் படைக்க வேண்டா இல்லையேல் படைக்க
வொண்ணா(து), உலகினுக் குபாதா னந்தான் உள்ள தாய்க்
காரி யத்தாம், உலகினைப் படைக்கில் அங்கும் உளதில தாவ
துண்டே. ௮௪

(உரை) உலகத்தைப் படைத்தவன் ஒரு கர்த்தாவென்று நீ கூறினாய், இவ்வுலகம் முன்புள்ளதாய்ப் பின்பு படைத்தானாயின் முன்புள்ளதை ஒருவன் படைக்கவேண்டுவதில்லை, இவ்வுலகம் முன்பில்லையாயின் ஒருவன் படைக்கவுள்ள தாகாது, அவ்வுலகினுக்குக் காரண



முள்ளதாய்க் காரியங்கெடுமாதலாற் காரியப்படும் உலகினைப் படைத்தானென்றுகூறின், யாதொருபொருள் உள்ளதும் இல்லதுமாகவுண்டோ. ௨௧

உள்ளது கடாதி போல உதிப்பித்தான் என்று ரைக்கின்
மெள்ளவே யெங்கு நின்று விதித்தனன் உலகின் மீது
வள்ளல் தான்நின்றா னென்னில் வந்ததாம் உலக முன்னே
தள்ளிடா தெங்கு நிற்கின் எங்குமுன் தந்த தாமே. ௮௫

(உரை) மண்போல உலகிற்கு மூலமுள்ளதாய்க் கடாதிகளைக் குலாலன் தோற்றுவிக்குமாபோல இவ்வுலகங்களை ஒருவனுண்டாக்கினானென்று நீ கூறின், இவ்வுலகத்தை யுண்டாக்குமிடத்து மெல்ல எவ்விடத்து நின்றுண்டாக்கினான், பிரபஞ்சத்திலே நின்று கர்த்தாவுண்டாக்கினானென்று கூறிற் பிரபஞ்சம் முன்னே உண்டானதாம், நீங்கப்படாமல் எங்கு நிறைந்து நின்று உண்டாக்கினானென்று நீ கூறின் எங்குமென்பதொரு முதலாய்க் கர்த்தாவைப் பின்பு தந்ததாம். ௨௨

இல்லது கருணை யாலே இயற்றினன் இறைவன் என்னில்
கொல்லரி உழுவை நாகங் கூற்றமுங் கொண்டு தோற்ற
வல்லவன் கருணை யென்னோ வலியினால் வேண்டிற் றெல்லாம்
பல்கவே படைத்தா னாயிற் பித்தரைப் பணிந்தி டாயே. ௮௬

(உரை) எல்லாவற்றிற்குங் கர்த்தாவானவன் இருக்குமிடம் நியமிக்கப்படாமையின் அப்படி யந்நியமான கர்த்தா காருண்ணியத்தினாலே இல்லாததொன்றைப் படைத்தானென்று கூறின், கொலைத்தொழிலைப் பொருந்தின சிங்கத்தையும் புலியையும் யானையையுங் கூற்றத்தையும் உண்டாக்கிக்கொண்டு தோற்றவல்லவனுக்குக் காருண்ணியமென்னோ, கர்த்தா வல்லவனாகையாலே எல்லா ஆன்மாக்களும் வர்த்திக்கும்படி படைத்தானென்று கூறின், அஃதோர் காரணகாரியப்படாமற் பித்தர்செய்யுங் குணமாதலாற் பித்தரையே கர்த்தாவாக வணங்குவாயாக. ௨௩

பெறுவதிங் கென்ப டைத்துப் பெற்றது விளையாட் டென்னில்
சிறுமழ விறைய தாகும் செய்திடும் கன்மத் தென்னின்

உறுபெருங் கன்மஞ் செய்வோர் முன்புள ராவ ருண்மை
அறிவுறின் ஞால மெல்லாம் அநாதியென் றறிந்தி டாயே.

(உரை) சர்வான்மாக்களையும் இவ்விடத்துப் படைத்துப் பெறும் பேறென்னென்று கேட்டவிடத்துப் பெறும்பேறு விளையாட்டென்று கூறின், உன்கர்த்தா இளவறிவினனாய்ச் சிறுபிள்ளையாக வேண்டும், கன்மத்துக்கீடாகப் படைத்தானென்று கூறின், கன்மஞ்செய்வோர் அநாதியாவர், இதனை மெய்யாக அறியின், பிரபஞ்சமெல்லாம் அநாதியே யுள்ளதென்றறிவாயாக. ௨௪

உருவொடு நின்ற னென்னின் உருவமுன் படைத்தார் வேண்டும்
உருவவன் இச்சை யென்னில் உலகெலாம் இச்சை யாகும்
உருவுல கத்து ளோர்கட் குறுவது கன்மா லென்னின்
உருவுடை யோர்கட் கெல்லாம் உற்றது கன்மத் தாமே. ௮௮

(உரை) உன்கர்த்தா உருபியென்று சொல்லின் அவ்வுருவத்தை முன்புண்டாக்கினர் வேண்டும்; அவனதிச்சையாலே உருவத்தை யெடுத்துக்கொண்டானென்னின் உலகத்துள்ளோருந் தமதிச்சை யாலே உருவெடுத்துக்கொண்டாராவார்; உருவம் உலகத்திலுள்ள வர்க்கு வருவது அவரவர் கன்மத்தாலென்று நீ சொல்லின் உருவ முடையவர்களெல்லார்க்கும் உருவமுறுவது கன்மத்தாலேயே யாக வேண்டும். ௨௫

அருவெனில் பவத்தி னின்றும் எடுத்திடான் ஆகா சம்போல்
மருவினன் நிழல்போ லென்னின் மருவினோர்க் காகும் மாட்சி
பெருகிய அறிவுண் டென்று பேசிடின் நேசத் தோடும்
கருதிட உருவம் வேண்டும் இல்லையேற் கருத லின்றே. ௮௯

(உரை) உன் கர்த்தா அருபியென்று கூறில் ஆகாசம்போலச் சேட்டையிலனாகையால் ஆன்மாக்களைப் பிறவிக்கடலினின்றும் எடுத் திடமாட்டாதவனவன்; யாவருஞ்சென்றடையத்தக்க நிழல்போல்வ னென்னின், அந்நிழல் தன்னிடத்துவந்து மருவினோர்க்கே நன்மை யைக்கொடுத்தலால் அவனும் வியாபியல்லன்; ஏகதேசியாயினும் நிறைந்த அறிவினை யுடையனென்றுகூறின் விருப்போடுஞ் சிந்தித் தறியத்தக்கதோர் உருவுண்டாதல் வேண்டும்; அப்படியறியத்தக்க உருவில்லையாயின் அறிவுமில்லையாம். ௨௬



எங்கள்நூல் அநாதி யாக இறைவனுண் டென்னு மென்னின்
உங்கள்நூல் உரைப்பா ரின்றி ஓதுவ தழகி தாகும்
அங்கவன் தன்னை நூல்கொண் டறிந்தனம் அவனைக் கொண்டே
இங்குநூல் அறிந்தோ மென்னில் ஈதோரரச் சரிய மாமே.

(உரை) எங்கள்நூலாகிய வேதாகமங்கள் அநாதியுமாகிக் கர்த்தா வுண்டென்று சொல்லுமென்று கூறின் உங்கள் நூலாகிய வேதாகமங் கள் சொல்லுவாருமின்றித் தோன்றுமென்பது அழகிதாயிருக்கும்; அவ்விடத்துக் கர்த்தா வுண்டென்று வேதங்கொண்டு அறிந்தன மென்றும் அந்தக்கர்த்தாவைக்கொண்டே வேதங்கேட்கப்பட்டதென் றுங் கூறின், ஈதிங்ஙனமே மயங்கினது இதனை முன் கேட்டுங்கண் டும் அறிந்தனவல்லவாம். ௨௭

உற்றெழு மரங்க ளாதி உயிரின்றிப் பூத ரூபம்
பற்றியிப் பாரின் மீது பாங்கினுற் பலவு மாகிப்
புற்றொடு மயிர்கொம் பாதி போலவே தோன்றி மாயும்
மற்றுள யோனி கட்குப் பயனென வழங்கு மன்றே. ௯௧

(உரை) பூமியினிடமாக நின்று வளரும்மரங்கள் முதற் புல்லீறாக வுள்ளன தாவரங்களாம்: அவை உயிர்வர்க்க மல்லவாய்ப் பிருதிவி யப்புத் தேயு வாயுவென்னும் பூதரூபத்தைப் பொருந்திய பகுதிகளா கப் பலபேதப்பட்டுப் புற்றுப்போலவும் மயிர்போலவுங் கொம்பு போலவும் உண்டாய் வளர்ந்து மீளவுந் தோன்றின முறைமைப்பாட் டிலேகெடும். இஃதியாது காரணமாயுண்டாயதென்னின், அண்ட சஞ் சுவேதசஞ் சராயுசமென்னும் மூன்று பேதத்திலுண்டாகிய ஆன்மாக்களுக்குப் பிரயோசன காரணத்தால் அநாதியேயுண்டாய் வழங்கும். ௨௮

கோன்றிட லாகா தென்றும் கொன்றவை கொண்டு நாளும்
தின்றிட லாகு மண்ணோ டொத்திடும் செத்த வெல்லாம்
ஒன்றிய வாச மூட்டி உண்ணுநீர் வைத்த வர்க்கோ
சென்றுநின் றுண்ட வர்க்கோ புண்ணியம் செப்பி டாயே. ௯௨

(உரை) தானோர் ஆன்மாவைக்கோறல் ஒருகாலும் நியாயமன்று, மாண்டவெல்லாம் மண்ணோடொக்குமாதலால் ஒருவர் கொல்லப் பட்டவற்றைக் கைக்கொண்டு எப்பொழுதும் புசிக்கலாம், அதனால்

தோடமுண்டாகாது, மணங்களாற் கட்டுப்பட்ட நீர் அருமையான வழிகளிலே உண்டாக்கிவைத்தவர்க்குப் புண்ணியமுண்டாயதோ? வழிநடந்து தாகித்துக் குடித்தவர்க்குப் புண்ணியமுண்டாயதோ? சொல்லாய் வைத்தவர்க்கே புண்ணியம் உண்டாமாதலாற் கொன்றவர்க்கே பாவமுண்டாவது, தின்றவர்க்குப் பாவமில்லையாம். ௨௯

ஓங்கிய உருவ மோடும் வேதனை குறிப்பி னோடும்
தாங்குபா வனைவிஞ் ஞானம் தாம்வை ஐந்துங் கூடிப்
பாங்கினாற் சந்தா னத்திற் கெடுவது பந்த துக்கம்
ஆங்கவை பொன்றக் கேடாய் அழிவது முத்தி யின்பம். ௯௩

(உரை) மிக்க உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமென்னும் ஐந்துகந்தமும் ஒருமைப்பட்டு ஒழுங்கிலே காரியங்கெடக் காரணங் கிடக்குமென்பது மிகுத்துரையில் வழக்குமாய்ப் பந்ததுக்கமுமாம். அவ்விடத்துச் சொல்லப்பட்ட கந்தங்கள்ஐந்தும் நோராகக்கெட்டு வீட்டையடையுமென்பது முத்தியின்பமாம்.

இனி உருவமாவதெட்டு. அவை பூதவுருநாலு, உபாதானவுரு நாலு. அவை வருமாறு—பிருதிவி, அப்பு, தேயு, வாயுவெனுநாலும் பூதவுரு. வலி, கந்தம், இரதம், வன்னமெனு நாலும் உபாதானவுரு. ஆக - ௮. வேதனையாவது மூன்று. அவை வருமாறு—குசலாவேதனை அகுசலாவேதனை, குசலாகுசலாவேதனை. ஆக - ௩. குறிப்பாவது ஆறு—சோத்திரம், துவக்கு, சக்ஷு, சிகுவை, ஆக்கிராணம், மனம் ஆக - ௬. பாவனை இருபது—தீக்குணம் - ௧௦. நற்குணம் - ௧௦. தீக்குணங்களாவன—பொய்சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனிலசொல்லல் எனவாக்கின்குணம் ௪. களவிற்குப் போகுதல், வறிதே தொழில்செய்தல், கொலைசெய்தல் எனக் காயத்தின்குணம் ௩. கொலைநினைக்கை, காமப்பற்று, ஆசை எனமனத்தின் குணம் ௩. ஆக - ௧௦. நற்குணங்களாவன—மெய்யுரை, நல்வார்த்தை, இனியனகூறல், பயன்படுசொல் எனவாக்கின் குணம் ௪. பள்ளிவலம் வரல், தவம்புரிதல், தானஞ் செய்தல் எனக் காயத்தின்குணம் ௩. அருள்நினைவு, ஆசையறுத்தல், தவப்பற்று என மனத்தின்குணம் ௩. ஆக - ௧௦. ஆகப்பாவனை-௨௦. இவை, மானச வாசிக காயங்களான் வருவனவாம். விஞ்ஞானம் ஆறு. அவையாவன—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், சித்தம். ஆக - ௬. ஆகப் பஞ்சகந்தபேதம்-௪௩. இதற்கு அவன் வசநம்—"எட்டிவை யுருவ மூன்று வேதனை யாறு ஞானம் - ஒட்டிய குறிப்போ ராறு செய்கையு மிருப தாகக் - கட்டிய பஞ்ச கந்தங் கணத்தினிற் பங்க மாகுந் - தொட்டநாற் பத்து மூன்றுஞ் சுகதநூற் றுணிவு தானே." என்பதாம். சந்தானமாவது—தொடர்ச்சி. அந்தத்தொடர்ச்சி நால்வகையாம். அவை—வாயு சந்தாநம், தீபசந்தாநம், தாராசந்தாநம், பிபீலிகா சந்தானம் என்பனவாம்.



அழித்திடும் அராக மாதி அகற்றிநல் லறங்கள் பூரித்(து)
இழித்திடும் புலன்கள் போக்கி இன்பொடு துன்பம் வாட்டிப்
பழித்திடாப் பழுதில் வாழ்க்கை எட்டையும் பாரித்தெல்லாம்
ஒழித்திடு ஞான சீலம் சமாதியின் உறுதி யாமே. ௯௪

(உரை) நன்மையைக் கெடுக்குங் காமக் குரோத லோப மோகமத மாற்சரியங்களை நீக்கி, நன்றான தன்மங்களை நிறையச்செய்து, பொல்லாங்கைச் செய்யும் புலன்வழிச்சேறலைக் கைவிட்டு, துன்பஇன்பங்களையொழித்துப் புண்ணியபாவங்களைக் கெடுத்து, பிறரால் பழிக்கப்படாத குற்றமில்லாத நல்வாழ்க்கை எட்டையும் விரித்து, மற்றுந் தோஷங்களானவை யெல்லாமொழித்திடும் ஞானகுணமாவது சமாதியின் உறுதியாம்.

பழுதிலாவாழ்க்கை எட்டாவன—நற்சாட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்க. தீவாழ்க்கை எட்டாவன—நற்காட்சி முதலாயினவற்றை மாறிக்கொள்க. சமாதியினுறுதி வாழ்க்கை இவையெட்டுங்கெட இருத்தல். இதற்கவன் வசனம்—"சகலமு மான்மாவுங் காரணனு மில்லை, சகலமுமா மநித்தஞ் சார்பாற் பிறவி, வகைவினை யுண்டுபெதி பொன்ற மாய்தல், சுகதநூன் முத்தித் துணிவு" என்பதாம். ௩௧

## சௌத்திராந்திகன் மத மறுதலை

அனைத்தினையும் உணர்ந்தானெம் இறைவ னென்றி கறியாது புத்தநீ அறைந்தா யென்றும், அனைத்தினையும் அறி திடான் அளவி லாமை ஒன்றொன்று அனைத்தினையும் அறிந்த னென்னின், அனைத்தினையும் அளவிறந்த தென்ன வேண்ட அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம், அனைத்தினையுட அறியாது கணத்தில் தோன்றி அழிதலால் அறிந்தமையின் றுகு மன்றே. ௯௫

(உரை) புத்த! நீ முழுவதையும் உணர்ந்தான் எம்முடைய கடவு ளென்று அறியாமற் கூறினாய்; எப்போதும் சர்வத்தையு முணர்ந்து அறியமாட்டான் பிரபஞ்சபேதம் அளவிட அரிதாகையால், முழுதை யும் ஒவ்வொன்றாக அறிந்தானென்று நீகூறின் அப்படி அறியுமிடத் தச் செலவு கலப்பு நீக்கத்தால் அறியவேண்டும்; ஆதலால், அதனை யளவிறந்ததென்று கூறவேண்டாம், எல்லையில்லாத ஞானத்தால் அறிந்தானென்று நீகூறின் உனது ஞானம் அனைத்தினையும் அறிய மாட்டாது. அஃதியாங்ஙனமெனின், ஒருமாத்திரையில் அறிவு தோன்றிக் கெடுமென்றும் நீ கூறுகையால் அனைத்தினையும் அறிந்தா னென்கையில்லையாம். ௧

சிலபொருளை அறிந்தவற்றின் திறத்தே யொட்டிச் சிந்திப்பன் எப்பொருளும் என்னிற் சென்று, பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப் பயின்றுவரு மாதலாற் பார்க்கு மாறென், உலகுதனில் ஒருபொருளங் குணரும் போதின் உற்றுணர்தல் ஆராய்தல் தெளித லுண்டாய், நிலவுமத னல் உணர்வு பன்மை முன்பின் நின்றிடா தென்பையெல்லாம் நினைப்ப தெங்கே. ௯௬

(உரை) பிரபஞ்சபேதத்திற் சிலபொருள்களை அறிந்து அவற் றின் பகுதியிலே எல்லாப் பொருள்களையுமொட்டிச் சிந்திப்ப னென்று புத்த! நீகூறின், அறிவாலறியும்பொருள் பலவாகச் சென்று அவற்றின் பலபகுதியாகிப் பொருந்திவருமாகையால், ஒன்றைக் கொண்டு அவற்றின் பேதமறியுமாறெங்ஙனம்? அன்றியும், பிரபஞ்



சத்தில் ஒருபொருளை யறியுமிடத்துக் கூடியறிந்தாராய்ந்து தெளி தல் வேண்டுமாதலால் ஒன்றையறியும்போது பலபேதப்படுகையாலும் நீமுன்புண்டானவறிவு பின்பில்லையென்று சொல்லுவையாகையாலும் ஒருபொருளையறிந்து அதனோடு மற்றொருபொருளைச் சேர்த் தறியுநெறி யாண்டுள்ளது. ௨

முத்திநிலம் கண்டறங்கள் மொழிந்தா னுயின் முதல் முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம், ஒத்திடுந் தேன் நெய்கூட்டி உண்டிறந்தோன் ஒருவன் உலகினில்வந் திதுதீதென் றுரைத்தால் ஒக்கும், செத்ததுபின் னென் றுரைக்கில் கதியில் செல்லாத் தேரனுரை நீர்பெருகிச் செ ன்று றுகும், அத்தினள வறியாதிக் கரையோர் தம்மை யக் கரைக்கே செல்லவிடும் ஆசை யாமே. ௯௭

(உரை) வீட்டிடத்தைக்கண்டு பின்பு அறமுதலியவற்றைச் சொன்னானென்று புத்த! நீகூறின் ஒருமுதல் சேரக்கெட்டுப்போய்ப் பின்புவந்து சொன்னதென்னும் முறைமையொக்கும். அஃதென் போலவெனின், தேனையும் நெய்யையுங்கூட்டிக் குடித்துச்செத்தோ னொருவன் மீளவும்உலகின்கண்வந்து தேனும் நெய்யுங்கூடினது விஷ மென்று சொன்ன தன்மைத்து, அறமுதலியவற்றைக்கூறி வீட்டிடத் தைப் பின்பு அடைந்தானென்னில் அவன் முத்தியை யறிந்தவனல் லன். ஆதலால் அவன் கூறிய அறமுங் கதியிற்செலுத்தமாட்டாது, புத்தன் உரையானது ஜலமானது பெருகிச் சென்றோடும் ஆற்றின் அளவறியாதானொருவன் இக்கரையினின்றோரை அக்கரையிலே செலுத்திவிடுவேனென்று ஆசைப்படுதல்போலும். ௩

நீர்போல நின்றுயிர்கட் களித்தி டாதே நெருப்பாய துயர்ப்பிறப்பின் நிகழ்ந்து நின்று, பாரோருக் களித்தபடி வலையிற் பட்ட பலகலைமான் கண்டொருநீள் கலைபாய்ந் தோடி, நேரேசென் றவ்வலைக்கே நேர்ந்தா லொக்கும் நீள்பாவக் குழியில்விழு நீர்மை யாகும், ஆரோவிங் கவனைப்பார் அறத்தையாக்கப் பிறந்தறமாக் கினனென்னில் அடங்க வாமே. ௯௮

(உரை) கர்த்தா ஜலமும் அதன் இரதமும்போலச் சர்வான்மாக் களிடத்திலும் நீங்காமல் நின்று இரட்சிப்பனென்னாதே, கொடிதாகிய

தீத்தன்மையையுடைய துன்பப்பிறவியின்கண்ணே தோன்றிநின்று பிரபஞ்சத்தார்க்கு அருள்செய்வனென்னுமது, வலையிற்பட்ட பல மான்களையுங் கலைகளையுங்கண்டு அப்பாற்பட்டு நின்ற ஒரு கலையானது இவற்றை யிரக்ஷிக்கவோடித் தவறுமற்சென்று அந்தவலைக்குள்ளே தானுமகப்பட்ட தன்மைபோலும், மிக்க நரகத்திற்செல்லும் வழியாமிதனை, மெய்யே யிரக்ஷிக்கும் வழியென்று சொல்லுகிற புத்தனை யொப்பார் யாவர், அறமுதலியனவற்றை யுண்டாக்க வேண்டித் தான் பிறந்து அறத்தையுண்டாக்கினன் என்னில், சர்வான்மாக்களுந் தருமத்தையுண்டாக்கவேண்டிப் பிறந்தார்களாம். ௪

அலகிறந்த யோனிகளில் புகுந்த தெல்லாம் அறத்தை அளித் திடவென்னில் அவற்றி னெல்லாம், நிலவுவது கன் மத்தா லாகு மன்றி நினைந்ததோர் இச்சையினால் நிகழ்ந்தானாகில், உலகுதனி லுள்ளோர்க்கும் அதுவே யாகும் ஒருத்தி வயிற் றினிலிருந்தங் குதரந் தள்ளித், தலமதில்வந் தானென்னில் தாயைக்கொன்றான் தருமத்தை யின்றெனக்குச் சாற்றிடேலே. ௯௯

(உரை) எண்ணிறந்த யோனிகளிற் சாதனானதெல்லாந் தன் மத்தை யுண்டாக்கவேண்டியென்று புத்த! நீகூறின், அங்ஙனம் பல யோனிசாதனானது கன்மத்தாலாகவேண்டும்; அற்றன்று, தான் கருதிய விருப்புக்காரணத்தாற் காயமெடுத்துக்கொண்டானென்றுகூறின், பிரபஞ்சத்திலுள்ளோர் காயமெடுத்துக்கொண்டதுந் தன்மஞ்செய்ய விரும்பி யெடுத்துக் கொண்டதேயாம்; அங்ஙனம் ஆன்மாக்கள்போல யோனிசாதனானதில்லை, மாதாவின் உதரத்தேயிருந்து அவ்வுதரத்தைப்பிளந்து பூமியின்கண்ணே வந்து அறத்தையுண்டாக்கினன் என்று நீ கூறின், அங்ஙனம் மாதாவைக்கொன்று அறத்தையுண்டாக்கினான்என்னில், அத்தாயைக் கொன்றான் கூறிய தன்மத்தை இப்போதெனக்குக் கூறுவாயல்லை.

புத்தன் பிறக்கிறகாலத்து மாதாவினுடைய வலமருங்குலாற் பிறந்தான். அவளும் ஆறுநாள் குற்றுயிரோடே கிடந்து எழாநாள் இறந்தாள். இது புத்தர் மாதாக்களிருபத்துநால்வர்க்கு மொக்கும். இதனை—"உலும்பிலி வனத்து ளொண்குழைத் தேவி-வலம்படு மருங்குல் வடுவோ யுறுமலான்றோ னவ்வழித் தோன்றின னுதலி - னீன்றோ ளேழாநா ளின்னுயிர் வதைத்தான்." என்னும் விம்பசாரகதையாற்றெளிக,—'முத்தராம் புத்தர் தோன்றித் தாய்பழுவை முறித்தேவிட்டார்-கொத்துவாழ் குழலா ளாகுங் குண்டல கேசி தானுங்-கத்திருவாங் கணவனைக் காடனையுங் கொன்றிட்டா - ரித்துணையா ரிருவரும்வந் திங்ஙனே தவமுரைப்பார்." இது சித்தாந்த வசனம். ௫

அரியினொடு நரிஉழுவை ஆதி யாக ஆனபோ தறந்திரிந்து கோற லாதி, பரிவினொடும் செய்தனனும் இல்லையாகிற் பசிதனக்குத் தின்பதவன் பழுதை யோதான், கருதிலவன் பரதுக்க துக்க னாகிற் கணவனிழந் தோர்கட்குங் கண்ணி குத்தித், திரியுமவர் துயரினுக்கும் இரங்கு வோன்றன் செயலறத்துக் கழகிய தாஞ் செப்புங் காலே. ௧௦௦

(உரை) உன் ஆதிபுத்தன் அலகிறந்த யோனிகளிற் பிறந்தானென்றும் அப்படிப்பிறந்தது கொலைமுதலிய பாவங்களைநீங்கித் தன்மத்தைப் பரிபாலிக்க விரும்பி யென்றுங் கூறினாய்; அங்ஙனமாயின் புத்தன், சிங்கம் நரி புலி முதலிய யோனிகளிலே சாதனானவிடத்துத் தன்மத்தை விட்டுக் கொலையை விரும்பிப் பலஆன்மாக்களையுங் கொன்றுதின்ற இது பிரியத்தோடுஞ்செய்தானாகவேண்டும், அப்படிக் கொன்று தின்றானில்லையென்று சொல்லுவையாயின் அந்த யோனி சாதனாய்த் திரிந்தவிடத்துண்டான பசிக்குப் புத்தன் தின்பது பழுதையோ? அன்றேன் மாமிசமன்றோ? ஈதன்றியும், பரதுக்கதுக்கனென்று நீ சொல்லின், பூகேதனாய்ப் பலவான்மாக்களைக் கோறலால் பொல்லாதவனானதன்றியும், கணவனைநீங்கிச் சோரத்திற்செல்லு மகளிர் உறுந்துயரத்தினுக்கும், கண்ணி முதலியகொண்டு கொலைத்தொழில் புரிவோர் துயரத்தினுக்கும் இரங்குவனென்னில் அச்செய்தி அவன்தன்மத்துக்கு அழகிதாம் சொல்லுங்காலத்துங் கருதுங்காலத்தும். ௬

ஒருபொருளைத் தேடிஅதற் குரையுந் தேடி உரைப்பதன்முன் உணர்விறக்கும் உனக்கு நூலென், மருவிவருஞ் சந்தான வழியில் என்னில் வாயுரைத்த தேயுரைத்து வழங்கு மாகும், பெருகுவது கெட்டென்னில் அதுபோ லாம்பின் பித்துரைத்த தறியாது பேதை சொல்லும், தருவது

நூல் எப்பரிசு முதல்நடுவோ டிறுதி தான்விருத்த மின்றியது
சாற்றி டாயே. ௧௦௧

(உரை) ஒருபொருளைத்தேடி அதற்கேற்றதோர் சொல்லையுந் தேடிச் சொல்லொடு பொருளைக்கூட்டி நூலாகக் கூறுதன்முன்னே உன்ஞானங்கெடுமாதலால் உனக்கு நூலுண்டாம்படியென். அற்றன்று, அவ்வறிவுபொருந்தி வருந்தொடர்ச்சி வழித்தோன்றின நூலாமென்று புத்த ! நீகூறின், முன்சொன்ன அக்கரமொன்றையே பின்சொல்லி நிற்கவேண்டும். அற்றன்று, முன்னறிவுகெட்டுப் பின்தோன்றுமறிவு மிக்கவறிவாமென்று கூறின், அங்ஙனம் பின்தோன்றுமறிவுங்கணத்திற் கெடுகையாலே முன்னறிவேயாம், உனது நூல் பித்தர்சொல்லுஞ் சொல்லும் அறியாதார் சொல்லுஞ்சொல்லுஞ் சொல்லிற்றும், நூலாவது முதல்நடுஇறுதி மாறுபாடில்லாததாலால் எப்பெற்றியதனது நூல், உன்னுடைய பழுதுநூலை யென்னுடன்சொல்வா யல்லை. ௭

முன்னாகப் பலஅறங்கள் பூரித்தெம் இறைவன் முழு
துணர்ந்திங் கருளினால் உயிர்கள் முத்தி அடையப், பின்னாகப்
பிடகநூல் உரைத்தா னென்று பேசினாய் இவன்முன்பு பேர
றங்கள் புரிநூல், சொன்னாரார் இவனைப்போல் முன்னொரு
வன் என்னில் அவனுக்குச் சொன்னாரார் எனத்தொடர்ச்சி
யாகி, அன்னாய்பின் அனவத்தைப் படுமொருவன் இன்றாம்
ஆரோஉன் பாழியிருப் பார்இதனை அறையே. ௧௦௨

(உரை) ஆதியிலே எம்முடைய கடவுள் பலதருமங்களைச்செய்து நிறைந்து சருவஞ்ஞனாய் கிருபையாலே ஆன்மாக்கள் வீட்டின்ப மடைதற்கும் பின்பு அறஞ்செய்தற்கும் வழியாகிய பிடகநூலை அருளினானென்று புத்த நீசொன்னாய், பெரியஅறங்களை யுண்டாக்க இவனுக்கு முன்பு நூல்சொன்னவரார். அவனுக்கு முன்பு அவனாசாரியன் சொன்னானென்று கூறின், அவனாசாரியன்றனக்குச்சொன்னார் ஆரென மேன்மேல் தொடர்ச்சிப்பட்டுப் பின்சொற்கு உத்தரமின்றி முட்டுப்படுமாகையாற் கர்த்தாவுமில்லையாம். இஃதன்றியும், உன் பள்ளியுள் நீதெய்வமென்றேத்த இருப்பாராரோ கூறுவாயாக.

அனவத்தைப்படு மொருவனென்றாய், அனவத்தையென்பதொரு தோடங்கொண்டு நின்றுசொன்ன னொருவனென்றா யென்பது. அநவத்தை - தலைகாணாதது அல்லது முடிவுகாணாதது. அன்னாய் - அசை. ௮



இந்நூலைச் சொன்னவன் தான் இங்கிருந்தா னென்னில்
இவனிருத்தி யேத்துமவன் எங்கிருந்தா னெவனோ, அந்
நூலோ குருவந்த அடைவுமுனக் கில்லை அடைவுதரின் முடி
வின்கண் அநாதி போதன், சொன்னனும் அவைவேத
தா கமங்க ளாகுஞ் சுருக்கியூண் தவம்புரியச் சொல்லுவ தெல்
லோரும், உன்நூல்கண் கழுவாதே உதிப்ப தன்முன் புலா
லோ டுண்பானோர் ஊன்பிரிய னுரைத்ததொரு நூலே. ௧௦௩

(உரை) இந்தப் பிடகசாத்திரஞ்சொன்ன புத்தாசாரியன் இப்பள்ளியிலிருந்தானாகில், இவன் ஆசாரியனாக ஏத்தப்பட்டவனாவான் எவ்விடத்தான், கடவுளாவான் எவன், அவனாற் சொல்லப்பட்ட நூலெவ்விடத்தது, அவை காணப்படாமையாற் குருசந்தான அடைவும் உனக்கில்லையாம், நூலடைவு சொல்லப்புகின் சங்காரத்தின்கண் அழிவில்லாத பரமேசுவரன் சொல்லப்பட்டனவாம். அவை வேதாகமங்களென்பர், இவ்வாகமங்களின் சார்வுளார் சொல்லுவது உணவைச் சுருக்கித் தவத்தைப் புரிதலை. இங்ஙனமன்றி, உன்னுடைய பிடக நூல் கண்கழுவாது சூரியனுதிக்குமுன்னே புலாலுடன் உண்பானொரு போசனப்பிரியன் சொல்லப்பட்ட நூலாம். ௯

முன்நூலும் வழிநூலும் சார்பு நூலும் மூன்றாகும்
உலகத்து மொழிந்த நூல்கள், இந்நூலில் உன்நூலிங் கெந்நூ
லென்னில் இந்நூல்கா ணென்நூலென் றியம்ப மாட்டாய்,
உன்நூலும் ஒருநூலாய் உரைப்ப தென்னே உலட்டுநூல்
பருத்திநூல் சிலம்பி நூல்கள், அந்நூலு மல்லாதே பொய்ந்
நூல்கொண்டிங் கறநோற்றுத் திரிந்தவா றழகி தாமே. ௧௦௪

(உரை) இவ்வுலகின்கண் வழங்குநூல்கள் முதல்நூலும் வழிநூலும் சார்புநூலுமென மூன்றுவிதமாம், இங்ஙனம் மூன்றுவிதமான நூல்களில் உன்நூல் எந்தநூலென்று கேட்டால் இந்த நூல்களில் என்னுடையநூல் இந்நூலென்று சொல்லவல்லாயல்லை. ஆதலால், உன்நூலை ஒருநூலாய்ச் சொல்வதெப்படி, உலண்டாற் செய்தநூல் பருத்தியாற்செய்தநூல் சிலம்பியால்செய்த நூலென்று

சொல்லப்பட்ட நூல்களின் தகுதியுமல்லாத உனது பொய்யாகிய நூலைக் கொண்டு இங்கே அறத்தையுண்டாக்கி நடந்தது ஆச்சரியம்.

புத்தனவன் பொன்றக்கெட் டுப்போனானென்று போற்று வதிங்காரைநீ பொய்த்தவஞ்செய் புத்தா, செத்தவர்க்குச் சில கிரியை செய்ய இங்குச் செய்தவர்க்கும் புண்ணியமாமென்று செப்பின், நித்தமுயி ராதலாற் பலிக்குஞ் செய்தி நினைந்து தரு வானுமுளன் உனக்கிவ்வா றில்லை, வைத்தசுடர்த் தீப மற மாய்ந்தக்கா லதற்கு மருவுதிரி நெய்கூட்டு மதிகேடன் வழக்கே. ௧௦௫

(உரை) பொய்த்தவத்தைச் செய்யும் புத்தா நீ உன்னாசாரியன் முதலறக்கெட்டுப் போயினானென்றுசொல்லி இவ்விடத்துப் போற்று வதுயாவரை; இறந்தோரைநோக்கிச்செய்த சிலநன்மை இருந்தோர்க் கும் புண்ணியமாமென்று கூறின், உயிர்கள் நித்தமாதல்வேண்டும், ஆகையால் கொடுக்கும் பலியாலுண்டாகிய புண்ணியம் இத்தன்மை யென்று நினைந்து அப்புண்ணியபலம் அருளுவானாகிய ஒரு கர்த்தாவும் உண்டாகவேண்டும். இந்நெறி உன்நூல்நெறியன்று, பொன்றக் கெட்டவர்க்குச் செய்யுஞ் சிறப்பாகிய உனது வழக்கு தீபம் பொன்றக் கெட்டவிடத்து இறந்த தீபத்துக்குபகாரமென்று கருதி நெய்யுந் திரி யுங்கூட்டும் அறிவின்மைபோலும். ௧௧

நூலுரைத்தான் ஒருவனுளன் என்றநுமா னத்தால் நூல்கொண்டிங் கறிந்தாற்போல் நூலா நூலின், பாலுரைத்த பொருள்களெல்லாம் அநுமான மென்னிற் பரலோக பாதாள லோகங்க ளொருசொல், லாலுரைத்த நூலின்றி அறையா யின்றேல் அவையறிந்த படியெனுன தநுமான மன்றே, மேலுரைக்கும் பிரமாண முனக்கில்லை காட்சி யநுமானம் விட்டபொருள் விளக்குவதா கமமே. ௧௦௬

(உரை) நூலைச்சொன்னவன் ஒருவனுண்டென்று நூலைக்கொண்டு அநுமித்தாற்போலச் சிறந்தநூலின் பகுதியிற்சொன்ன பொருள்க ளெல்லாமறிகை அநுமானமென்று புத்த நீகூறின், பூமிக்குமேலான வுலகங்களின் செய்தியுங் கீழானவுலகங்களின்செய்தியும் நூல்கொண்டு சொல்லுவதின்று அநுமித்துச் சொல்லலாமாயிற்சொல்லாய், அந்த

உ

சிவமயம்

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

# நடத்தப்போகிற சைவத் தேர்வுகள்

1. **தேர்வுகளின் பெயர்** :—(i) இளஞ் சைவப் புலவர் தேர்வு (ii) சைவப் புலவர் தேர்வு. இவை முறையே முதற் றேர்வு இரண்டாந் தேர்வெனக் கீழே குறிக்கப்படும்.

2. **நடக்கக் கூடிய இடங்கள்** :—சென்னை, சிதம்பரம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயன்புத்தூர், வேறு பிற தகுந்த இடங்கள்.

3. **பதிவுத் தொகை.** (பிரவேசக் கட்டணம்) முதற்றேர் விற்கு ஒரு ரூபா; இரண்டாந் தேர்விற்கு இரண்டு ரூபா.

4. **யாருக்கு** :—முதற்றேர்வு இருபத்தைந்து ஆண்டுக் குட்பட்ட யாவருக்கும்; இரண்டாந் தேர்வு யாவருக்கும் உரித்தானது. முதற்றேர்வுக்குச் செல்லாமலேயும், இருபத் தைந்து ஆண்டுக் குட்பட்டவரும் இரண்டாந் தேர்வுக்குப் போகலாம். ஆனால் முதற்றேர்வுக்குச் சென்று தேர்ச்சித் தகுதிபெறத் தவறியவர்கள் இரண்டாந்தேர்வுக்குச் செல்லு தல் கூடாது. ஆண்டு உறுதிச் சீட்டு (Age certificate) தக்கவரிடம் பெற்று அனுப்ப வேண்டும். சமாஜ அங்கத்தவ ரும், பள்ளிக்கூடத் தமிழ்ப் பண்டிதரும், கிராம முன்சீபும் ஆண்டு உறுதிச்சீட்டு தருதற்குத் தக்கவராவர்.

5. **நடை முறை** :—பதிவுத் தொகையுடன் மனுத் தாளனுப்பும் கடைசி தேதி: 20-8-34. தேர்வு நடக்குந் தேதி: 15-11-34. முடிபு வெளியிடல்: 10-12-34. பட்டம் வழங்கல், பரிசளித்தல்:— சைவ சித்தாந்த மகாசமாஜ 29-வது மகா நாட்டில் 1934௵ டிசம்பர்மீ கடைசி வாரத் தில். இவ்வாறே ஒவ்வோர் ஆண்டிலும் அவ்வம்மாதம் அவ் வத் தேதிகளைக் கொள்க. மேற்கண்ட தேதிகளைப் பலர் சௌகரியத்தை முன்னிட்டுச் சில நாட்கள் முன்பின்னாக

மாற்றி இரண்டு திங்களுக்கு முன்னாகவே அறிவிக்கும் உரிமை சமாஜக் காரியதரிசிக்குண்டு. வேறு ஐயப்பாடுகளைத் தீர்க்கும் உரிமையும் அவருடையதே. இத்தேர்வுகளைப் பற்றிய ஐயப்பாடுகளை ரிப்ளைகார்டுமூலம் காரியதரிசியிடமிருந்து தீர்த்துக்கொள்ளலாம்.

6. **தகுதிச் சீட்டும் பட்டமும் :**—மேற்படித் தேர்வுகளில் ஒவ்வொரு வினாத் தாளிலும் நூற்றுக்கு 25 வீதமும் மொத்தத்தில் நூற்றுக்கு 35 வீதத்திற்குக் குறையாமலும் வாங்குபவர் மூன்றாம் வகுப்பிலும், நூற்றுக்கு 50 வீதத்திற்குக் குறையாது வாங்குவோர் இரண்டாம் வகுப்பிலும், நூற்றுக்கு 60 வீதத்திற்குக் குறையாது வாங்குவோர் முதல் வகுப்பிலும் தேறினவராகக் கருதப்படுவர். அதற்குத் தகுந்த தகுதிச் சீட்டுக்களும், இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் என்ற பட்டங்களும் ஆண்டுவிழாவில் வழங்கப்பெறும்.

7. **பரிசுகள் :**—முதற் றேர்வில் முதற் பரிசு 40 ரூபா ; இரண்டாந் தேர்வில் முதற் பரிசு 60 ரூபா. இத்தொகையைக் கொண்டு தங்கப் பதக்கம், புத்தகம் முதலியன வழங்கப்பெறும். ஒவ்வொரு தேர்விற்கும் இரண்டாம் மூன்றாம் பரிசுகளாக சமாஜ வெளியீடு முதலிய புத்தகங்கள் தக்கபடி வழங்கப்படும்.

8. **வினாத் தாள்களின் வகை தொகை :**—ஒவ்வொன்றும் இரண்டரை மணிப்பொழுதில் எழுதக்கூடிய இரண்டு வினாத் தாள்கள் முதல் தேர்விற்கு உண்டு. இரண்டாந் தேர்விற்கும் அப்படியே ; ஆனால் ஒவ்வொரு வினாத் தாளும் மூன்றுமணிப் பொழுது எழுதக் கூடியதாகும். அவை முறையே I, II என அடியிற் குறிக்கப்பட்டுள்ள பாடங்களைப் பொறுத்ததாகும்.

9. **பாடங்கள் :**—

### முதல் தேர்வு

I (அ) தேவார திருவாசகப் பதிகங்கள் பத்து:--சம்பந்தர்-(௧) திருநீலகண்டப் பதிகம், (௨) வாழ்க அந்தணர், அப்பர்-(௩) திருஅங்கமாலை, (௪) தனித்திருநேரிசை-தொண்டனேன் பட்டதென்னே, (௫) தனித்திருவிருத்தம்-வெள்ளிக்குழைத் துணி, (௬) தனித்திருக்குறுந்தொகை - மாசில் வீணையும், (௭) தனித்திருத்தாண்டகம் - அப்பனீ அம்மைநீ, சுந்தரர் - (௮) பரவும் பரிசொன்றறியேன், வாதவூரர் - (௯) திருவெம்பாவை, (௧௦) திருப்பள்ளி எழுச்சி. (இவை பத்தும் பொழிப்புரையுடன்)



(ஆ) பெரியபுராணம் - செய்யுள். இளையான்குடிமாற நாயனார். (பதவுரையுடன்)

(இ) பெரியபுராண வசனம் - நாவலர்.

(ஈ) திருக்குறள்-ஐந்து அதிகாரம் (பரிமேலழகர் உரையுடன்) :—கடவுள் வாழ்த்து, அறன் வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, வாய்மை.

(உ) சைவசமயநெறி :—மாணாக்க ரிலக்கணம் முழுவதும் ; பொதுவிலக்கணம் 22-ங் குறள் முதல் 75 முடிய ; 131 முதல் 222 முடிய. (இவை மூன்று பகுதிகளும் பொழிப்புரையுடன்)

II (அ) திருவருட் பயன். (ஆ) உண்மை விளக்கம்.

(இ) சிவப்பிரகாசம். (இவை மூன்றும் பொழிப்புரையுடன்)

(ஈ) மெய்கண்டாரும் சிவஞானபோதமும் - சமாஜப் பதிப்பு.

### இரண்டாந் தேர்வு

I (அ) அகத்தியர் தேவாரத் திரட்டு உரையுடன்.

(ஆ) உமாபதிசிவம் அருண்முறைத் திரட்டு உரையுடன் (சமாஜப் பதிப்பு)

(இ) திருவாசகம் - அகவல் நான்கு. (பொழிப்புரையுடன்)

(ஈ) பெரியபுராணம் - அப்பர். (பொழிப்புரையுடன்)

(உ) திருக்குறள் - அறத்துப்பால் முழுவதும். (பரிமேலழகர் உரையுடன்)

(ஊ) சைவ சமய நெறி :—ஆசாரிய நிலக்கணம் 20ங் குறள் முதல் 31 முடிய ; மாணாக்க நிலக்கணம் முழுவதும் ; பொதுவிலக்கணம் 1-81 ; 128-222 ; 230-256 ; 422-437. (பொழிப்புரையுடன்)

II (அ) சிவஞானபோதம் - சிவஞானசுவாமிகள் சிற்றுரை முழுவதும்.

(ஆ) சிவஞானசித்தி - சிவஞானசுவாமிகள் உரைமுழுவதும்.

(இ) சிவஞான சுவாமிகள் உரைக் கொத்து.

10. மனுத்தாளில் குறிக்கவேண்டிய விவரங்கள் :— விண்ணப்பம் செய்பவர் முழுப்பெயர், தகப்பனர் பெயர், சமயம், சாதி, குலம், தொழில், வயது, இருப்பிடம், தபால் விலாசம், மேற்கூறிய ஆண்டு உறுதிச் சீட்டு, விண்ணப்பம் செய்யும் தேதி, விண்ணப்பம் செய்பவர் கையொப்பம் ஆகிய இவ்விவரங்கள் ஒவ்வொரு மனுத்தாளிலும் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் :

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
சென்னை.

ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
பி. ஏ., பி. எல்.,
காரியதரிசி.

---

## சமாஜத்திற் கிடைக்கும் புத்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் ... | 0 | 12 |
| சுந்தரர் தேவாரம் ... | 0 | 4 |
| திருவாசகம் மூலமும் உரையும் ... | 3 | 0 |
| திருவாசகம், திருக்கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு | 0 | 10 |
| திருமந்திரம் ... | 1 | 0 |
| பதினொராந் திருமுறை ... | 0 | 11 |
| தலயாத்திரைப்படம் - விளக்கத்துடன் ... | 0 | 4 |
| உமாபதிசிவம் அருண்முறைத் திரட்டு மூலமும் உரையும் ... | 0 | 8 |
| மெய்கண்டா[illegible] சிவஞானபோ[illegible]ம் ... | 1 | 0 |
| "சித்தாந்[illegible]ம்" [illegible]ள்கோ - மலர் [illegible] ச,ரு,சு தனித்தனி... | 2 | 0 |

Sadhu Pres[illegible] Ma[illegible]dras.

## அநுதாபக் கூட்டம்

திருக்குறள் விளக்கவாசிரியர் கி. குப்புச்சாமி முதலியார் பிரிவாற்றாமையைத் தெரிவிக்க சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையில் இராயப்பேட்டை 'குகாநந்த நிலயத்தில்' **14-7-35**-ல் பிற்பகல் இரண்டுமணிக்குக் கூடிற்று. சமாஜக் காரியதரிசியும், திருவாளர்கள் வல்லி - ப. தெய்வநாயக முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை, ஆர். சண்முகசுந்தர செட்டியார் ஆகிய அன்பர்களும் பேசியபின் கீழ்வரும் தீர்மானம் நிறைவேறியது.

"சைவசித்தாந்த மகாசமாஜத்தின் சார்பில் கூட்டப்பெற்ற இப்பொதுக்கூட்டமானது திருக்குறள் விளக்க ஆசிரியர் திருவாளர் - கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் பல ஆண்டுகளாகக் கைம்மாறு கருதாமல் தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டு புரிந்துவந்தமையை நன்றியுடன் பாராட்டுவதோடு அவர் சிவபதமடைந்துவிட்டமை குறித்துத் தன் அநுதாபத்தை அவர் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது."

---

## இணைப்புச் சபை ஆண்டு விழா

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 31-ம் ஆண்டு விழா 1935௵ ஜூலை௴ 12, 13, 14-ம் நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்கள். முதல்நாள் வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் 8 மணிவரை திருவாளர் பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் M.A. 'திருப்புகழ் நுட்பம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். இரண்டாநாள் சனிக்கிழமை மாலை 6½ மணி முதல் 8 மணிவரை ஸ்ரீமதி ஈ. த. இராஜேஸ்வரி அம்மாள் அவர்கள் M.A., L.T. 'கோளறு பதிகம்' என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். மூன்றாநாள் காலை இராயப்பேட்டை சுந்தரேசப் பெருமான் திருக்கோயில் முருகப்பிரானார்க்கு வீதிவிழா நடைபெற்றது. 12 மணிக்குக் 'குகானந்த நிலைய'த்தில் மாகேசுரபூசை நிகழ்ந்தது. பகல் 4½ மணிமுதல் இரவு 10 மணிவரை அவை நிகழ்ந்தது. திருவாளர்கள் C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., வித்வான் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, M. A., B. L., மு. ஆறுமுகம் பிள்ளை, வரதராஜ சுவாமிகள் ஆகிய இவர்கள் முறையே 'சேக்கிழார்', 'பெரியாழ்வார்', 'அப்பர்', 'ஈசுவர நிர்ணயம்' என்னும் பொருள்கள்பற்றிப் பேசினார்கள். தலைவர் சுவாமிகள் கருத்துரை, வந்தனமொழி வாழ்த்தொலியோடு 31-ம் ஆண்டுவிழா இனிது நிறைவெய்தியது. ஸ்ரீமத் சுவாமிகள் ஒருவாரம்வரை சபையிற் றங்கியிருந்து, இராயப்பேட்டை கோயிலில் 'சங்கரனே சண்முகன்' 'ஆலயவழிபாடு' என்னும் பெரும்பொருள்கள் பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 8

# சித்தாந்த சாத்திரம் பதினான்கு

# மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1133 பக்கங் கொண்டது; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935ஆம் ஆண்டு சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—8—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.